MADRAS RECORD OFFICE
30 SEP 1966
EGMORE, MADRAS 8

மேழிச்செல்வம்

பராபவ ஹூ புரட்டாசி மீ
(செப்டம்பர்-அக்டோபர் 1966)

2/2. R.R. No. 175/66 P

விலை
25 பை

பெருந்துறையில் தேசீய செயல் விளக்க வயலில் வீரியக் கம்பைப் பார்வையிடுபவர் மாநில விவசாயக் கூட்டு நெறியாளர் திரு. இ. ஜி. சிவசாமி அவர்களும், விவசாயியும்.

பெருந்துறை வட்டாரம் எஸ். பி. முத்துசாமிக் கவுண்டர் தோட்டத்தில் எச். பி. 1 கம்பு தேசீய நிரூபண வயல்.



பெருந்துறையில் வீரியக்கம்பு தேசீய நிரூபணப் பாத்தியை மாவட்ட விவசாய அதிகாரி திரு. வெங்கடசாமியும் பெருந்துறை வட்டார வவசாய விஸ்தரிப்பாளர்கள், அருகேயுள்ள விவசாயிகளும் பார்வையிடுகின்றனர்.

மேழிச்செல்வம்

சந்தாதாரர்களுக்கு

நினைவூட்டுகிறோம்

1966ஆம் ஆண்டு நவம்பர்–டிசம்பர்(ஐப்பசி) மாதம் இத முடன் முடிவாகும் 'மேழிச்செல்வம்' சந்தாதாரர்களின் சந்தா எண் மாவட்டவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மாவட்டம்		சந்தா எண்	
		முதல்	வரையுள்ள
செங்கல்பட்டு	..	4250	4271
தென்ஆற்காடு	..	8276	8512
வடஆற்காடு	..	1614	1796
தஞ்சாவூர் ..	..	2963	3157
திருச்சி ..	..	8708	8720
சேலம் ..	..	309	406
மதுரை ..	..	5215	5303
கோயம்புத்தூர்	..	7583	7822
இராமநாதபுரம்		4326	4364
திருநெல்வேலி	..	1585	1685
கன்னியாகுமரி	..	2261	2275
நீலகிரி ..	..	Nil	Nil
உள்ளூர் சந்தா	..	2779	2792

"மேழிச்செல்வம்" தொடர்ந்து பெற மேற்படி சந்தாதாரர்கள் வருட சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

விவசாய நெறியாளர்,
தபால் பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை-5

புதுப்பிக்கும்போது தவறாமல் மாவட்டத்தையும் சந்தா எண்ணையும் அதில் குறிப்பிடவும்.

முன்பு தலைமை அலுவலகத்தில் சந்தா செலுத்தியவர்கள் சந்தா எண்ணுடன் உள்ளூர் சந்தா என்று குறிப்பிடவும்.

புதிதாக சந்தா செலுத்த விரும்புவோர் ஆண்டு சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) அருகில் உள்ள விவசாய அலுவலகத்தில் அல்லது மணியார்டர் மூலம் மேற்குறிப்பிட்ட முகவரியில் செலுத்தி சந்தாதாரராகப் பதிவு செய்துக் கொள்ளலாம். சந்தா தொகை செலுத்தும்போது தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

ஆறு மாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால், மாவட்டம், சந்தா எண் முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேற்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும்.

உள்ளுரை

			பக்கம்
1.	சமவெளியில் சீமைக்காய்கறிகள் சாகுபடி.	..	5
2.	எனது புதிய அனுபவம்	..	7
3.	சுடுமல்லியின் தொல்லைதீர புதிய சோளம்.	..	8
4.	விவசாயச் செய்திக் கதிர்	..	11
5.	உருளை கிழங்கின் இலைகருகல் நோய்.	..	14
6.	நம்நாடும் உயர்ந்திடாதோ !	..	16
7.	விவசாய இலாகாவிலிருந்து பாறை உடைக்கும் இயந்திரம் வாடகைக்கு பெறுவதற்கான விதிகள்.	..	17
8.	மோரிஸ் வாழை சாகுபடி	..	18
9.	போதிய இடைவெளிவிட்டு தென்னை நடுங்கள்.	..	21
10.	கேள்வியும் பதிலும்	..	24
11.	வானொலிச் செய்திகள்	..	26
12.	கரும்பு விளைச்சல் போட்டி 1965-66	..	28
13.	1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய காலநிலை அறிக்கை.	..	29

விளம்பரங்கள் :

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்	..	4
அப்காய்	..	12
அமெரிக்கன் ஸ்டிரிங் ..	..	13
டாடாபைஸன்	..	20
கைத்தொழில் பொருள்களினால் இன்பமான இல்லங்கள்	..	25

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

மூலம் கிடைக்கும் நன்மைகள்

- எப்பொழுது, எவ்வளவு குழந்தைகள் வேண்டும் என்று தீர்மானிக்கலாம்.
- மனைவியின் உடல் நிலையை சரியாக வைத்துக் கொள்ளலாம்.
- குழந்தைகளின் தேக ஆரோக்கியத்தை நன்கு கவனித்து சிறந்த கல்வி அளித்து ஆளாக்கிவிடலாம்.
- பயமோ கிலேசமோ இல்லாமல் மண வாழ்க்கையை இன்பமாக வாழ தெரிந்து கொள்ளலாம்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு பல முறைகள் உள்ளன.
ஏதாவதொன்றை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

இலவச ஆலோசனைக்கும்,
சேவைக்கும் குடும்பக் கட்டுப்பாடு
நிலையத்திற்கு செல்லுங்கள்

DA-66/307

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலே

மலர் 23 | பராபவஃ புரட்டாசிமீ 1966 —செப்டம்பர்-அக்டோபர் | இதழ் 9

சமவெளியில் சீமைக்காய்கறிகள் சாகுபடி

திரு. பி. எஸ். குப்புசாமி, [தோட்டக் கலே நிபுணர் (காய்கறி)[

தக்காளி, கேபேஜ், பீட்ரூட் போன்ற சில காய்கறிகள் உலக முழுவதிலும் விரும்பிச சாப்பிடப்படுகின்றன. முட்டைகோஸ், காலிபிளவர் போன்ற சீமைக் காய்கறிகள் தாது உப்புகளுக்கு உறைவிடமாகும். இவைகளில் உள்ள கால்ஷியம் சத்து நம் எலும்புகளுக்கும், பற்களுக்கும் வளர்ச்சியையும், இதிலுள்ள இரும்புச்சத்து இரத்தத்தில் உயிர் சத்துகள் அதிகரிக்கவும், அயோடின்' நம் தைராய்டு சுரப்பிகள் நன்கு வேலே செய்யவும் பாஸ்பரஸ் என்ற சத்து உடலில் உள்ள திசுக்களுக்தும் வெகுவாக பயன்படுகின்றன. அவைகள் ஏ, சீ வைட்டமின் களுக்கும் உறைவிடமாகவும் இருக்கிறது.

விளேயும் பகுதிக்ள்

இங்கிலீஷ் காய்கறிகளுக்கு (சீமைக் காய்கறிகள்) குளிர்ச்சியான பனி மூட்டம் படர்ந்த இடமே சிறந்தது. இவைகள் அநேகமாக மலேப்பிராந்தியங்களில் குளிர்ந்த சீதோஷ்ணம் உள்ள இடங்களிலேயே பெரும் பகுதி பயரிடப்படுகிறது. இருந்தபோதிலும் சமவெளியிலும் கூட இவைகள் குளிர்மாதங்களில் பயிரிடப்படுகின்றன. முட்டைக்கோசும், காலிபிளவரும், குளிர்காலத்தில் சென்னேயிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், கோயம் புத்தூர், மதுரை மற்றும் தர்மபுரி ஜில்லாவில் உள்ள ஹோசூர் தாலுக்காவிலும், பயிரிடப்படுகிறது. பீட்ரூட் என்ற வகை காய்கறி கோயமுத்தூர் ஜில்லாவில் முள்ளங்கிக்கு அடுத்ததாக பயிரிடப்படுகிறது. பிரன்சு பீன்ஸ் என்ற காய்கறி வகை, குளிர்காலம் மட்டும் அல்லாது மழை காலங்களிலும் பயிரிடப்பட்டு வருகின்றது; இவை தவிர கேரட், நூல்கோல் முதலிய காய்கறி வகைகளேயும் சமவெளியில் பயிரிடலாம்.

சீமைக் காய்கறி விதையில் கவனம் தேவை.

இங்கிலீஷ் காய்கறிகள், பயிரிடுவோர் நல்ல சிறந்த பொறுக்கு விதைகளே தேர்ந்தெடுத்தல் அவசியம். கேபேஜில், எர்லிடிரம்ஹெட், ''கோபன்ஹேகன் மார்கட்" "கோல்டன்" ஏகர் என்பதே மிகச் சிறந்த ரகங்களாகும். ''ஸ்னோபால்" என்ற காலிபிளவர் ரகம் மிகவும் பிரசித்தமானது. ''கிரிம்ஸன் குளோப்" ஒரு உயர்ந்த தினுசு ஆகும். காரட் ரகத்தில் "நன்டாஸ்" என்ற ரகம் நல்ல தரமுள்ள மகசூல் கொடுக்கும். நமக்குத் தெரிந்த நல்ல பெயர் பெற்ற ஒரு ஸ்தாபனத்திட மிருந்துதான் தரமான பொறுக்கு வித்துக்களே வாங்க வேண்டும்.

மண்ணும் பருவமும்.

சமவெளிப் பகுதிகளில் காபேஜ் மற்றும் காலிபிளவர் பயிரிட சிறந்த காலம் ஆகஸ்டு, செப்டம்பர்

முதல் டிசம்பர், ஜனவரி வரை உள்ள பருவகாலமே யாகும். இவைகள் எல்லாவகை மண்வகைகளிலும் பயிரிடப்பட்ட போதிலும், வடிகால் வசதியுள்ள வண்டல், செம்மண் அல்லது செம்மண் கலந்த மணல்சாரி நிலங்கள் மிகவும் லாயக்கானவை. நிலத்தை நன்கு தோண்டியோ அல்லது பலமுறை ஆழ உழுதோ தயார் செய்தல் அவசியம்.

விதையும் விதைக்கும் முறையும்.

ஒரு ஏக்கர் நடவு செய்வதற்காக சுமார் கால் கிலோ விதையை மேடான பாத்திகளில் நாற்றுவிட வேண்டும். 30 முதல் 40 நாட்களில் நாற்றைப் பிடுங்கி முக்கால் மீட்டருக்கு ஒரு மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நமக்குத் தெரிந்த நல்ல பெயர் பெற்ற ஒரு ஸ்தாபனத்திடமிருந்துதான் தரமான பொறுக்கு வித்துக்களை வாங்கவேண்டும்.

உரமும், உரமிடுதலும்.

காய்கறிகள் நிறைய பலன் தரும் செடிகளாதலால் அவற்றுக்கு அதிக எரு தேவைப்படும்: பயிரிட நிலம் தயார் செய்யும்போதே ஏக்கருக்கு 25 முதல் 30 வண்டி வரை எரு போட்டு நிலத்தை வளப்படுத்த வேண்டும்.

இரசாயன உரங்கள்

முட்டைகோஸ், காலிபிளவர்.

முட்டைகோஸ், காலிபிளவர், நூல்கோல் முதலிய வகைகளுக்கு 2-ம் நம்பர் கலப்புரம் 4 மூட்டை கடைசி உழவின்போதும், ஒரு மாதம் கழித்து, மறுபடியும் 50 கிலோ அமோனியம் சல்பேட் மேலுரமாகவும் போட வேண்டும்.

கிழங்கு வகை பயிர்கள்.

கிழங்கு வகைப் பயிர்களான பீட்ரூட், கேரட், டர்னிப் முதலியவற்றிற்கு 3-ம் நெம்பர் கலப்புரம் மூன்று மூட்டைகள் கடைசி உழவின்போதும் மறுபடியும் ஒரு மாதம் கழித்தும் போட வேண்டும். யூரியா போன்ற ரசாயன உரங்களை நீரில் கரைத்து தெளிப்பதும் எருவிடும் முறைகளில் ஒன்ருகும்.

நீர்பாசனம்.

தண்ணீர் பாய்ச்சுதல் தாராளமாக இருக்க வேண்டும். ஆனல் மிதமிஞ்சி இருக்கக்கூடாது. பார்பிடித்து பாசனம் செய்வது பாத்திப் பாசனத்தைவிட சிறந்தது. நாட்கள் அதிகமானுலும் நன்கு ஊறும் அளவுக்கு நீர்ப்பாய்ச்சுதல் சிறிது சிறிதாக அடிக்கடி நீர்ப்பாய்ச்சுதலைவிடச் சிறந்ததாகும்.

விற்பனை மற்றும் இடவசதிக்கேற்ப திட்டமிட்ட முறையில் சாகுபடி முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒன்று மாற்றி ஒன்று என்ற முறையில் மாற்றி மாற்றி பயிரிடும் முறையை அனுசரித்தால் நிறைய மகசூல் காணலாம்.

பயிரிடும் காலம் மற்றும் விதை ரகத்தைப் பொருத்து மூன்றரை முதல் நான்கு மாதங்களுக்குள்ளாகவே அறுவடை செய்யலாம். சாதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 3,500 முதல் 4,000 கிலோ வரை மக்சூல் கிடைக்கும்.

மண்ணுக்குள் விளையும் காய்கறிகளில், பீட்ரூட் முதன்மை வகிக்கிறது. இது சுமார் 600 ஏக்கராவில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் பயிரிடப்படுகிறது. வழக்கமாக 20, 50 சென்டி மீட்டர் இடைவெளியில் நடப்படுகிறது. ஒரு ஏக்கர் நடுவதற்குச் சுமார் ஒரு கிலோ விதை தேவைப்படுகிறது. கிழங்கு வகைச் செடிகளை விதைகள் சிறியதாக இருந்தாலும் நாற்று விடாமல் மேலே கூறப்பட்ட இடைவெளியில் இரண்டு மூன்று விதைகளாக ஊன்ற வேண்டும். முளைப்புக்குப் பின்னர் வீரியமான ஒரு செடியை விட்டு மற்றதைப் பிடுங்கி எறிய வேண்டும். கிழங்குகள் 80 முதல் 85 நாட்களுக்குள் அறுவடைக்கு தயார் ஆகிவிடும். கேரட் பயிரிட இதே முறையில் விதைகளாகவே 15, 30 சென்டி மீட்டர் இடை வெளியில் நடவேண்டும். ஒரு ஏக்கர் நடுவதற்கு இரண்டு கிலோ விதை தேவைப்படும்.

இங்கிலீஷ் காய்கறிகள் யாவரும் விரும்பி சாப்பிடு கிறேம். ஆகவே அதன் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. சமவெளி களிலும் கூட அவைகளைப் பயிரிடுவதே இதற்கு சிறந்த வழியாகும்.

சீமை முள்ளங்கி, நல்ல வளமுள்ள பூமியில் பயிரிட்டால் நான்கு முதல் ஐந்து வாரங்களிலேயே பலனளிக்கும். இவற்றில் இருவகை உண்டு. அதாவது சிவப்பு, வெள்ளை என்ற இரண்டு வகை. இவற்றில் வெள்ளையையே வெகுவாக விரும்புகிருர்கள். இது சிறியதாகவும். நீளமுள்ளதாகவும் இருக்கும்.

பிரஞ்சு பீன்ஸ் மிகக் குறுகிய காலத்தில் அறுவடைக்கு வரக்கூடியது. நமது மாநிலத்தில் எல்லா இடங்களிலும் குளிர் காலத்தில் பயிரிடலாம். இவைகள் வரிசையாக ஒரு செடிக்கு மறு செடி 30 முதல் 40 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு நடவேண்டும். இதன் காய்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்னமே அறுவடை செய்யப்பட வேண்டும். இதனை முதிர்ச்சி அடையவிட்டால் தொடர்ந்து பூப்பதும் காய்ப்பதும் குறைந்துவிடும். தொட்டி களிலும் பெட்டிகளிலும் வைத்துப் பயிரிட மிகவும் சிறந்தது.

வெற்றிகரமான விவசாயப் பெருமக்களின் அனுபவங்கள்.

எனது புதிய அனுபவம்

எஸ். முத்துசாமிக்கவுண்டர். பெருந்துறை

சென்ற மே மாதம் பெருந்துறை விவசாய விஸ்தரிப்பு அதிகாரி என்னிடம் வந்து, புதிய கம்பு விதை தருகிறோம். அதை ஒரு ஏக்கரில் பயிர் செய்யுங்கள் என்று சொன்னவுடன் நான் மிகவும் தயங்கினேன். காரணம் ஏற்கெனவே நான் நாட்டு ரக கம்பு நாற்றங்கால் ஒரு ஏக்கருக்கு வேண்டிய அளவுக்கு தயார் செய்திருந்தேன். எனவே மிகவும் தயக்கத்துடன் புதிய கம்பு விதை பயிர் செய்ய ஒப்புக்கொண்டேன். மறுநாள் விவசாய அலுவலகம் சென்று பெற்றுக்கொண்ட ஒரு கிலோ எச். பி. 1 வீரிய கம்பு விதையைக் கண்டவுடன் இது அரை ஏக்கர் பயிர் செய்யக்கூட போதாது என்றே கருதினேன். பின்னர் விவசாய விஸ்தரிப்பு அதிகாரி சொன்ன ஆலோசனைகளின் படியே மூன்று செண்ட் அளவுக்கு 1966-ம் ஆண்டு மே மாதம் 9-ம் தேதி அந்த விதையைக்கொண்டு நாற்றங்கால் தயார் செய்தேன். நடவு வயலை நன்கு உழுதேன். 20 வண்டி குப்பை எரு இட்டேன். கடைசி உழவில் 160 கிலோ 1-ம் நெ. மிக்ஸரும் 44 கிலோ சூப்பரும் இட்டேன். பின்னர் 1½'-க்கு ஒன்றாக வரப்புகள் உள்ள பாத்திகள் அமைத்தேன். நாற்றின் வயது 18 நாள் ஆனவுடன் நடவு ஆரம்பித்தேன். 1½ அடி அகலமுள்ள வரப்புகளில் 6 அங்குலத்திற்கு ஒன்றாக பயிர் நட்டேன். தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக 22-ம் நாள் வரை நடவு நடந்தது. பூமி மிகவும் வறண்டு இருந்தமையால் சில நாற்றுகள் பட்டுவிட்டன. அவ்விடங்களில் வேறு நாற்றுகளை நட்டேன். 25-ம் நாள் மீண்டும் 33 கிலோ யூரியா வைத்தேன். 30-ம் நாள் பயிருக்கு ஒரு தடவை எண்டிரின் மருந்து அடித்தேன். பயிர் அதிக கிளைப்புகளுடன் நன்றாக வளர்ந்தது.

வீரிய கம்பு நட்ட அன்றே நாட்டு ரக கம்பும் நட்டு பயிர் செய்திருந்தேன். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்த போது வீரிய கம்பு பயிர்கள் ஒவ்வொன்றிலும் 8 முதல் 15 வரை கிளைப்புகள் இருந்தன. ஆனால் நாட்டு ரகத்தில் ஒன்று அல்லது இரண்டு கிளைப்புகளே இருந்தன.

ஐம்பதாம் நாள் அளவில் கதிர்கள் வெளிவர ஆரம்பித்தது. ஒவ்வொரு கிளைப்பில் இருந்தும் நல்ல திடமான கதிர்கள் வந்தன. பின்னர் சில நாட்கள் கழித்து பார்த்த பொழுது ஒவ்வொரு பயிரின் கணுக்களில் இருந்து இரண்டு முதல் நான்கு வரை புதிதாக கதிர்கள் வெளி வருவது காணப்பட்டது. இந்தக் கதிர்கள் அளவில் சற்று சிறியதாக இருந்தபோதிலும் இவைகளிலும் நன்கு திடமான மணிகள் பிடிப்பது காணப்பட்டது. பயிர் அறுவடைக்கு சில நாட்களுக்கு முன்னர் வேகமாக காற்று வீசியபோது நாட்டு ரகம் சாய்ந்துவிட்டது. ஆனால், வீரிய கம்பு சிறிதும் சாயவில்லை.

1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் நாள் அன்று 'பயிர் அறுவடை' விழா நடத்த அறுவடை நடந்தது. பின்னர் கதிர் அடித்து அளவிட்டு பார்த்ததில் 1,615 கிலோ தானியம் (23 மூட்டை) கிடைத்தது. (முற்றாததால் அறுவடையாகாமல் இன்னும் சில கதிர்கள் உள்ளன. அவற்றில் எதிர்பார்க்கும் மதிப்பு 200 கிலோ தானியம்) நாட்டு ரகத்தில் ஏக்கருக்கு 900 கிலோ தானியமே கிடைத்தது.

இந்த புதிய அனுபவத்திலிருந்து நான் அறிந்த உண்மை வீரிய கம்பு எச்.பி. 1 கம்பு பயிர்செய்யும் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்.

1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் நாள் பெருந்துறை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் நடந்த விதைப் பெருக்கு தினவிழாவில் குறிப்பிட்டதையே மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

"இந்தக் கம்பு எனக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் கிடைத்திருந்தால் என் பெண்ணை பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் கல்லூரியில் படிக்க வைக்க வசதியுள்ளவனாக இருந்திருப்பேன்'

சுடுமல்லியின் தொல்லைதீர
புதிய சோளம்

கே. மீனாட்சி. சு. தங்கவேலு (மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.)

புதிய பெரிய மஞ்சள் சோளம் கோ. 20.

பெரிய மஞ்சள் சோளம் சுடுமல்லி என்னும் புல்லுருவியால் தாக்கப்படுகிறது. சேலம், கோவை மாவட்டங்களில் இதன் தாக்குதல் மிகுதி. ஆனால் விவசாயிகள் சுடுமல்லியின் தொந்தரவோடு இனி எவ்வாறு பெரிய மஞ்சள் சோளம் பயிரிடுவது என்று அச்சப்பட வேண்டாம். அவர்களுடைய மனக்குறையையும், அச்சத்தையும் போக்க கோ. 20 என்ற சுடுமல்லியினால் பாதிக்கப்படாத ஒரு புதிய ரகச்சோளத்தை சென்னை வேளாண்துறை விநியோகித்து வருகிறது.

சுடுமல்லி—ஒரு புல்லுருவி

இந்த சுடுமல்லி (Striga) என்பது ஒருவகைப் புல்லுருவியாகும் (Parasite). இது புஞ்செய் நிலங்களில் சோள வேர்களின் மேல் களைபோல செழுமையாக வளர்ந்திருக்கும், ஆனால் இது களை அல்ல; எனென்றால் இந்த செடிக்கு, அதற்கு வேண்டிய உணவுப் பொருள்களை மண்ணிலிருந்து தானே உறிஞ்சிப் பயன்படுத்தும் சக்தி (Independant capacity) இடையாது இதற்குத் தேவையான உணவுப்பொருள்களைத் (Nutrients) தனி அமைப்புகள் கொண்ட வேரின் மூலம் சோளத்தின் வேரிலிருந்து உறிஞ்சிக்கொள்ளும். இந்தத் தனி அமைப்புள்ள சுடுமல்லியின் வேருக்கு ஹாஸ்ட்டோரியா என்று பெயர். சுடுமல்லிக்குச் சாதகமாகச் சோளவேர் எங்கெல்லாம் தட்டுப்படுகிறதோ அங்கெல்லாம் இவை முளைக்கின்றன. ஆகவே இது சோளத்திற்கு ஒரு அழையா விருந்தாளியாக உட்கார்ந்து விடுகிறது. நாளடைவில் சோளம் சேகரிக்கும் சத்துக்களை எல்லாம் உறிஞ்சி, நன்றாக பூத்துக் குலுங்கி, இனப்பெருக்கம் செய்கிறது. ஆனால் சோளமோ, வலுவிழந்து குன்றிப் போகிறது.



சுடுமல்லியின் தாக்குதல்

சுடுமல்லி செடி பல லட்சக்கணக்கான விதைகளை உற்பத்தி செய்யும். இந்த விதைகள் மண்ணில் விழுந்து மறுபடியும் சோளப்பயிர் வரும்வரை காத்துக் கொண்டிருக்கும். சோளப் பயிர் போட்டவுடனேயே மறுபடியும் தன் வேலையைத் துவங்கி விடும். சுடுமல்லியின் விதை இருபதாண்டுகளுக்குப் பிறகும் முளைக்கும் சக்தி (Viability) பெற்றுள்ளதால் மண்ணில் நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கின்றன. சோளம், வரகு ஆகிய இரு பயிர்களைத் தவிர வேறு எந்த பயிரையும் சுடுமல்லி பாதிப்பதில்லை.

தான் சேகரித்த சத்துக்களை எல்லாம் சுடுமல்லிக்குப் பறிகொடுத்த சோளம் தன் வளமையெல்லாம் குன்றி, நாளடைவில் நல்ல கதிர்களைப் பெறும் தன்மையை இழந்து விடும். அப்போது பயிர் நோயால் தாக்கப்பட்டதைப் போன்ற தோற்றத்தை அளிக்கும், மகசூல் ஐம்பது சதவிகிதம் வரையில் பாதிக்கப்படும்.

சுடுமல்லியின் தாக்குதலில் இருந்து சோளத்தைக் காப்பாற்ற, நாம் ஒவ்வொரு ஆண்டும் சுடுமல்லிச் செடிகளை பூப்பதற்கு முன்பே களை போல நீக்கினாலும், இதை முழுமையாக அகற்றுவது எளிதல்ல. எனென்றால்

சுடுமல்லியால் தாக்கப்பட்ட சோளம்.   தாக்கப்படாத கோ. 20 சோளம்.

ஒரு செடியிலிருந்து பல லட்சக்கணக்கான விதைகள் உண்டாகின்றன. இரண்டாவதாக, விதைகளுக்கு இருபதாண்டுகளுக்கு மேலும் முளைக்கும் சக்தி இருப்பதால், ஒவ்வொரு ஆண்டும் நாம் இவைகளை நீக்கினும் அவை ஆண்டுதோறும் முளைத்துக் கொண்டே இருக்கும். மேலும் சுடுமல்லி செடிகளை அகற்றிக் கொண்டிருந்தாலும், அதன் விதைகளை அழிக்கக்கூடிய இரசாயன மருந்துகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே இந்த சுடுமல்லியை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது பெரிய பிரச்னை ஆகிவிட்டது.

பிரச்னையைத் தீர்த்த திட்டம்.

ஆகையால், இதற்கு தனியான ஒரு திட்டமே உருவாக்கப்பட்டது. அதன்படி சுடுமல்லியினுல் தாக்கப்படாத ஒரு சோளத்தை உற்பத்தி செய்ய வழிவகைகள் ஆராயப்பட்டன. பல நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட சோள வகைகளில் எவை சுடுமல்லியினுல் தாக்கப்படாமல் இருக்கின்றன என்று தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வாறுன முயற்சியில் ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட பொங்கன் ஹைலோ என்ற ஒருவகைச் சோளம் இந்த சிறந்த தன்மையைப் பெற்றிருப்பதாக அறியப்பட்டது. ஆனால் இந்த சோளத்தின் குறைந்த மகசூலாலும் மற்றும் சில குறைபாடுகளாலும் இந்த சோளத்தையே இங்கு பயிரிட முடியவில்லை. ஆகவே இனச்சேர்க்கை (Hybridisation) மூலம் இந்த சோளத்தில் உள்ள சுடுமல்லியின் தாக்குதலை எதிர்க்கும் சக்தியை மட்டும், கோ. 1 பெரிய மஞ்சள் சோளத்தில் உட்புகுத்தப்பட்டது. இவ்வாறு உட்புகுத்தப்பட்ட வகைகளில் சிறந்த வகையை கோ. 20 என்று வெளியிடப்பட்டது.

கோ. 20. சோளத்தை நம்புங்கள்.

இந்த கோ. 20 வகை, தென்மேற்குப் பருவத்தில் விதைக்க ஒரு நல்ல பொறுக்கு வித்தாகும். இந்தப் புதிய சோளம், இப்பொழுது பயிரிடப்பட்டு வரும் பெரிய மஞ்சள் சோளத்தைப் போன்றே (கோ. 1) எல்லாத் தன்மைகளையும் பெற்றிருப்பதோடல்லாமல், சுடுமல்லியின் தாக்குதலால் பாதிக்கப்படாத தன்மையையும் பெற்றுள்ளது. நல்ல தானிய மகசூலும் அளிக்க வல்லது. மேலும் 12 அடி முதல் 15 அடி வரை உயரமாக வளர்ந்து இனிப்பு சாருடைய தட்டையை மாட்டுத் தீவனத்திற்கு அளிக்கிறது. இந்த சோளக்கதிரின் வளமான தன்மையை பக்கத்தில் காட்டியுள்ள படங்களில் காணலாம்.

சோளத்தின் வளத்தை உறிஞ்சி, அதைவிடச் செழுமையாக வளர்ந்துள்ள புல்லுருவி சுடுமல்லி.

கோ. 20 சோளம் கோ. 1, பெரிய மஞ்சள் சோளத்தைப் போன்றே 135 நாட்களில் பயிராகும். ஒரு ஏக்கருக்கு 500 கிலோ தானியத்தையும் 1200 கிலோ தட்டையையும் அளிக்க வல்லது. அதாவது கோ. 1 பெரிய மஞ்சள் சோளத்தைவிட 25 சதவிகிதம் வரை அதிக மகசூல் தரகூடிய தன்மை பெற்றுள்ளது. இச்சோளம் சுடுமல்லியின் தாக்குதலால் அதிகமாகப் பாதிக்கப்படமாட்டாது. ஆகவே சுடுமல்லியை ஆண்டுதோறும் அகற்றும் வேலையும் கிடையாது. இச்சோளத்தை பயிரிடுவதால் ஏக்கருக்கு குறைந்தது ரூ. 50 அதிக லாபம் கிடைக்கிறது.

இந்த புதிய ரகச் சோளத்தினால், கோவை, சேலம் மாவட்ட வேளாளப் பெருமக்கள் பெரிதும் பயன் அடைவர் என்று நம்பலாம்.

சுடுமல்லி தொல்லையை எதிர்த்து தலைநிமிர்ந்து நிற்கும் கோ. 20 சோளம்.

விவசாய செய்திக் கதிர்

(எம். கே. லிங்கையா, விரிவினை வல்லுநர், ஆர். எஸ். எர்னஸ்ட்; உதவி விரிவினை வல்லுநர்)

1. அதிக விளைச்சல் பெற நன்றாகப் பரம்படியுங்கள்

நெல் சாகுபடி செய்பவர்கள் நாற்று நடுவதற்கு முன்பே அவர்களுடைய வயல்களை நன்றாகப் பரம்படிக்க வேண்டும்.

மண்ணை நன்றாக சேறுக்க வயலில் போதுமான தண்ணீரை நிறுத்தி உழுதல் வேண்டும். பரம்படிக்கும்போது தண்ணீர் வெளியேறும் எல்லா வழிகளையும் சரியாக அடைத்துவிட வேண்டும். இல்லாவிடில், வெளியேறும் நீர், அதனுடன் நுண்ணிய மண்ணையும் நிலத்திலிருந்து எடுத்துச் சென்றுவிடும்.

நல்ல சேற்றை உண்டாக்க, இலேசான இரும்பு கலப்பை மிக உபயோகமாக இருக்கும். மேலும் திரும்பத் திரும்பப் பரம்படிக்கும் எண்ணிக்கையையும் குறைக்கும்.

பல தகடுகளைக் கொண்டிருக்கும் 'பர்மீஸ் சேட்டூன்' (Burmese Satoon) நன்றாக பரம்படிக்கவும், பசுந்தழைகளை மிதிக்கவும் சிபாரிசு செய்யப்படுகிறது. பசுந்தாளுரப் பயிர் சாகுபடி செய்திருப்பவர்கள் இந்த கருவி பெருமளவில் உபயோகமுடையது என்பதை அறிவார்கள்.

2. சிறந்த தீவனப்புல் சாகுபடிக்கு சில ஆலோசனைகள்—

(அ) பாசன நிலையில் அதிக தீவன மகசூல் பெறுவதற்கேற்ற சிறந்த புல்.

இதற்கு ஏற்றது நேப்பியர் புல் (Pennisettum purpureum) இந்த புல்லை மாதம் ஒருமுறை அறுக்கலாம். இது ஆண்டொன்றுக்கு ஒரு எக்கருக்கு சராசரியாக 90,700 ராத்தல் அல்லது 45 டன் விளைச்சல் தரக்கூடியது. அதற்கு 10 டன் தொழு உரம், அடியுரமாகப் போடப்பட வேண்டும்.

எக்கருக்கு 30 ராத்தல் தழைச்சத்து என்ற அளவில், ஒவவொரு முறை புல்லை அறுத்ததற்குப் பின்பும், முறையாக அம்மோனியம் சல்பேட்டை மேலுரமாகப் போட்டு வந்தால், அதிக விளைச்சல் கிடைக்கும்;

(ஆ) பாசனப் பயிராக வளர்க்கப்படும் தீவனப் புற்களுக்கான உர அளவுகள்.

புளுப.்.பல் புல் (Cenchrus glaucus) கொழுக்கட்டைப்புல் (C. Ciliaris), கினியா புல் (Panicum maximum), ஆஸ்திரேலிய வறட்சி தாங்கும் புல் (Pantidotale) மற்றும் நீர்ப்புல் (Brachiaria mutica) போன்ற புல் வகைகளைக் கொண்டு, தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக கோவை தாவரயியல் வல்லுநர் மற்றும் தாவர நூல் கூட்டுப் பேராசிரியரால் மேற்கொள்ளப்பட்ட உரப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே உர அளவு தற்பொழுது சிபாரிசு செய்யப்படுகிறது.

புளு ப.்.பல், நீர்ப்புல், மற்றும் கினியாபுல் ஆகிய வற்றிற்கு மாத்திரமே தற்பொழுது உர அளவு பின வருமாறு சிபாரிசு செய்யப்படுகிறது:—

1. தொழு உரம்	..	அடியுரமாக எக்கருக்கு 10 டன் போடவேண்டும்.
2. அம்மோனியம் சல்பேட்.	..	எக்கருக்கு 30 ராத்தல் தழைச்சத்து வழங்கும் வகையில் 150 ராத்தல் உரம். இந்த இரசாயன உரத்தை ஆண்டுதோறும் ஒவ்வொரு அறுவடை அல்லது புல்லை வெட்டியதற்குப் பின்பும் போட வேண்டும்.
3. சூபர் பாஸ்பேட்	..	30 ராத்தல் மணிச்சத்து வழங்க எக்கருக்கு 165 ராத்தல் உரம் இந்த இரசாயன உரத்தை நடும் பொழுதும் பின்பு வரும் ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் ஒவ்வொரு முறையுமாக போட வேண்டும்.

(இ) பாசன நிலையில் வளர்க்கும் புற்களை எத்தனை முறை வெட்ட இயலும்?

அதிக அளவு தீவன விளைச்சல் பெற எத்தனை முறை புற்களை வெட்ட வேண்டும் அல்லது அறுவடை செய்தல் வேண்டும் என்பது பற்றிய சிபாரிசுகள் வருமாறு :—

நீர்ப்புல் மற்றும் புளு ப.் பல் புற்களுக்கு 45 நாட்களுக்கு ஒரு முறை.

கினியா புல்லுக்கு 30 நாட்களுக்கு ஒரு முறை.

(ஈ) மானாவரி நிலையில் சிறந்த விளைச்சல் தரும் தீவனப் புல்.

இதற்கு புளுப..ஃபல் புல் ஏற்றதாகும். மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டால் இப்புல் ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை வெட்டினால் சராசரியாக 10,000 ராத்தல் பச்சைத் தீவனம் அளிக்கக்கூடியது.

III. தென் பிராந்தியங்களில் மிளகாய் பயிர் 'நுனி காய்தல்' மற்றும் 'பழ அழுகல்' நோய்களைத் தடுக்கும் முறை.

தென் பிராந்தியங்களில் மிளகாய் பெரும்பாலும் செப்டம்பர் முதல் மே மாத வரையான முதல் பருவத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. கொல்லிடோடிரைகம் கேப்சைசி (Colletotrichum Capsici) என்ற பூசணத்தால் உண்டாகும் நுனி காய்தல் (Die back), மற்றும் பழ அழுகல் போன்ற முக்கிய நோய்கள் இப்பருவத்தில் பெருமளவில் இப்பயிர்களைத் தாக்கி குறிப்பிடத் தகுந்த அழிவையும் சேதத்தையும் உண்டாக்குகிறது. 1965–66-ம் ஆண்டில் கோவில்பட்டி பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தில் முக்கிய பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட நோய்கொல்லிப் பரிசோதனைகளிலிருந்து, நோய்கொல்லி மருந்து தெளித்ததன் மூலம் குறைந்த அளவில் நோய் தாக்கியிருந்தாலும் மிளகாய் மகசூல் அதிகரித்திருப்பதாக காணப்படுகிறது. நோய்கொல்லி மருந்துகள், நாற்று நட்டு ஒரு மாதத்திற்குப் பின்பு ஆரம்பித்து, மூன்று வாரங்களுக்கொரு முறையாக நான்கு முறை தெளிக்கப்பட்டன. தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவை முறையே ஏக்கருக்கு 60 ராத்தல், 30 ராத்தல், 30 ராத்தல் என்ற அளவில் இருக்கும் வகையில் பயிருக்கு இரசாயன உரங்கள் வழங்கப்பட்டன.

0·1 சதம் 'கோசன்' மருந்தை (wettable sulphur preservation) நான்கு முறை தெளிப்பது, மருந்து தெளிக்கப்படாத பயிரைவிட, 13·5 சதம் அதிக மகசூல் அளிப்பதாக பரிசோதனைகளிலிருந்து அறியப்படுகிறது. எனவே நான்கு முறை 'கோசன்' (cosan) 0·1 சத மருந்து தெளிப்பது நோயின் தாக்குதலைக் குறைப்பதோடு கூட அதிக மகசூல் அளிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக லாபமளிக்கிறது,

IV. உங்கள் சோள வித்துக்களை அந்துப் பூச்சி வண்டுகள் தாக்காமல் தடுக்க இதோ ஒரு வழி!

சோள வித்துக்களை எந்த பூச்சியும் தாக்காமல் சேமித்து வைப்பது மிகவும் சிரமமானது என்பதை நாம் நம் அனுபவத்திலிருந்து அறிவோம். சேமித்து வைக்கப்பட்டுள்ள சோள வித்துக்களைத் தாக்கும் பூச்சிகளுள் முக்கியமானது அந்துப் பூச்சி வண்டாகும் (sitophilus oryzae). சோள வித்துக்களை டி. டி. டீ. 10 சதம் (Geigy 33) அல்லது மாலதியான் 4 சதம் (1·100) மருந்துடன் கலந்து வைத்தால் அது மேற்படி வண்டால் தாக்கப்படாமல் 12 மாதங்கள் வரை இருக்குமென்பது பரிசோதனைகளிலிருந்து அறியப்படுகிறது.

(தமிழாக்கம்—த. சோமசுந்தரம், விரிவினை விளக்குனர்)

விவசாயிகளின் நன்மைக்காக!

நிலங்களைச் சமப்படுத்துவதற்கும், கரை போடுவதற்கும் எங்கள் புல்டோசர் மிகவும் உதவும்.

எங்களிடம் உள்ள டிரில்லிங் மிஷினால் உங்கள் தண்ணீர் கஷ்டம் உடனடியாக நீங்கும்.

உழுவதற்கான இயந்திரங்களும் எங்களிடம் உள்ளன.

மிக மலிவான வாடகை!

உங்கள் தேவைக்கு உடனடியாக எழுதவும்.

அப்காய்,
சங்கர்நகர் அஞ்சல்,
திருநெல்வேலி ஜில்லா.

பயிர் பாதுகாப்பே அபார விளைச்சல்



மருத் பேட்டரி ஸ்ப்ரேயர்

மதிப்பு வாய்ந்த பயிர்கள், பயிர் நாச கிருமிகளாலும், பயிர் நோய்களினாலும் நாச மடைவது தேசீய நஷ்டமாகும்.

"ஆஸ்பி"

உபகரணங்கள்
அதை நிச்சயமாகவும்
திறமையாகவும்
தடுக்க வல்லது.



மருத் சார்ஜ் பம்ப்



கேடார்-யுடிலிடி ராகிங் ஸ்ப்ரேயர் ஹைஜெட் டிரிக்கர் இயக்கத்தோடு கூடிய ஸ்ப்ரேகன்
(கேடார்-யுடிலிடி அசைத்தியக்கும் திரவ மருந்து பீச்சும் இயந்திரம்)



ஆஸ்பி ஹாண்ட் ரோடரி டஸ்டர்
(கையினால் சுழற்றும் பௌடர் மருந்து தூவும் இயந்திரம்)

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரசிங் ஓர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மாலாட் :: பம்பாய்-64

போன் : 692331 (5 லைன்கள்)

தந்தி : "கில்லோகஸ்ட்" மாலாட் - பம்பாய்.

சென்னை, மைசூர் ராஜ்ய விநியோகஸ்தர்கள் :

எஸ். வி. ரங்கசாமி அண்டு கம்பெனி
பிரைவேட் லிமிடெட்,
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன்.
தபால் பெட்டி எண். 539,
பெங்களூர்-2.

சென்னை காரியாலயம்
நெ. 20, ஒய். எம். சி. ஏ. கட்டிடம்,
வெஸ்ட்காட் ரோடு.
ராயப்பேட்டை, சென்னை-14.

உருளைக்கிழங்கின் இலை கருகல் நோய்

(சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, டி. வி. சுப்ரமணியம், ஜி. முத்துசாமி, பூசண இயல் பிரிவு, விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோவை–3.)

உருளைக்கிழங்கில் கருகல்நோய் மகசூலை 58 சதவீதம் வரை பாதிக்கும். தகுந்த காப்பு முறைகள் தவிர இந் நாசத்தைத் தவிர்க்க வேறு வழியில்லை.

தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு முக்கியமாக நீலகிரி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் பகுதிகளிலும், சேலம் மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. உருளைக்கிழங்கை இலை மு ன் சருகல் நோய் (Early blight), பின் கருகல் நோய்கள் (Late blight) தாக்கி மகசூலை வெகுவாகக் குறைத்து விடுகின்றன. தற்சமயம் பின்கருகல் நோய் மிக கடுமையாக பயிரைத் தாக்குகின்றது. நோயினால் சுமார் 58 சதவீதம் வரை கிழங்கின் மகசூல் குறைந்து விடுகிறது. நோய் மிக விரைவில் மற்ற இடங்களுக்கும் பரவி கடுமையான சேதத்தை விளைவிக்கின்றது.

உருளைக்கிழங்கின் முக்கியமான இவ்விரு நோய்களைப் பற்றியும் அவற்றைத் தடுக்கும் முறைகளும் கீழே தரப் பட்டுள்ளன.

இலை முன் கருகல் நோய் (Early blight) :

இந் நோய் ஆல்டர்னேரியா சோலனை (Alternaria solani) என்ற ஒருவகைப் பூசணத்தால் ஏற்படுகின்றது. முன் கருகல் நோய் இந்தியாவிலும் உலகின் உருளைக் கிழங்கு பயிராகும் மற்ற இடங்களிலும் காணப்படுகின்றது. இந்தியாவில் சமவெளிப் பகுதிகளிலும், பின் கருகல் நோய் இல்லாத இடங்களிலும் கடுமையாக இந்நோய் காணப்படுகின்றது. நோய் விதைக் கிழங்கு நட்ட மூன்று அல்லது நான்கு வாரங்களில் தோன்ற ஆரம்பிக்கின்றது. இலைகளில் கரும் பழுப்பு அல்லது கருப்பு நிறப் புள்ளிகள் காணப்படுகின்றன. இப்புள்ளிகள் விட்டுவிட்டும், இலை களின் பல இடங்களிலும், அடுத்தடுத்த வட்டவடிவமாகவும் காணப்படுகின்றன. நோய் கடுமையாகக் கண்டால் இலைக் காம்புகளும், தண்டுகளும்கூட தாக்கப்படுகின்றன. செடிகள் மடிந்து விடுகின்றன. நோயினால் கிழங்குகள் சிறியதாகவும், மெல்லிய தோலுடனும் மாவுச் சத்து குறைந்தும் காணப்படுகின்றன.

நோயைத் தடுக்கும் முறைகள் :

பயிர் ஆறு அங்குல உயர வளர்ச்சியில் இருக்கும் பொழுது வாரம் ஒருமுறை ஒரு சதவீத போர்டோ கலவை அல்லது தாமிரம் கலந்த பூசண மருந்துகளை தெளித்தல் வேண்டும். டைதேன் Z-78 பூசண மருந்து நோயைத் தடுப்பதில் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இப் பூசண மருந்து நோயைத் தடுப்பதுடன் அதிக மகசூலையும் தருகிறது. (1½ பவுண்டு மருந்தை 100 காலன் தண்ணீரில் கரைக்கவேண்டும்.) நோயினால் தாக்கப்பட்ட செடிகளை



முன் கருகல் நேய்

அப்புறப்படுத்தி பயிர் சுகாதாரத்தை கையாளுதல் வேண்டும். சுத்தமான, நோயற்ற கிழங்குகளையே, விதைப் பதற்கு உபயோகிக்கவேண்டும். மாற்றுப் பயிர் பயிரிடு வதின் மூலம் நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

பின் கருகல் நோய் (Late blight) :

இந் நோய் பயிரின் பின்பருவ வளர்ச்சியில் தோன்று வதால் நோயுக்கு "பின் கருகல் நோய்" என்ற பெயர் ஏற்பட்டது. இது பைடாப்தோரா இன்பெஸ்டன்ஸ் (Phytophthora infestans) என்ற ஒரு பூசணத்தால் உண்டாகின்றது. 1961–ம் ஆண்டு மே மாத இறுதியில் கார் போகப்பயிரில் கடுமையான அளவில் பின் கருகல்

நோய் தோன்றி மகசூலை வெகுவாக குறைத்துவிட்டது. நீலகிரிக்கு இந்நோய் புதிதாக இருப்பினும், உலகின் ஏனைய உருளைக்கிழங்கு பயிராகும் எல்லா இடங்களிலும் பின் கருகல் நோய் சாதாரணமாகக் காணப்படுகின்றது. காலநிலையைப் பொறுத்து தொடர்ந்து இந்நோய் உருளைக் கிழங்கைத் தாக்கி வருகிறது. இலைகளில் சிறிய கருப்பு அல்லது கரும் நிறம் பழுப்பு நிறப் புள்ளிகள் முதலில் காணப்படுகின்றன. நோய் பரவ பரவப் புள்ளிகள் பெரிதாகி இலைப்பரப்பு முழுவதிலும் பரவி விடுகின்றன. இலைகளில் இருந்து தண்டுகளுக்கும் இந்நோய் பரவி விடுகின்றது. நோய் தாக்குண்ட செடிகளில் மேற்பாகம் முழுவதும் தாக்கப்பட்டு கருகி ஒருவித நாற்றத்தை வெளிப்படுத்து கின்றது. ஓரிரு வாரங்களில் செடி வாடிக் கருகி விடுகிறது.

மிதமான வெப்பநிலை, தொடர்ந்த மழை, ஈரத்துடன் கூடிய கடும்பனி முதலியவைகள் நோய் பரவுவதற்கு சாதகமான சூழ்நிலைகள். பயிரின் மேல் பாகம் முழுவதும் தாக்குண்டவுடன் பூமியின் அடியில் உள்ள கிழங்கிற்கும் நோய் பரவுகின்றது. நோய் தாக்குண்ட கிழங்குகளில் கருமை அல்லது கரும் பழுப்பு நிறப்புள்ளிகள் காணப் படுகின்றன. கிழங்கின் தோல் மெல்லியதாகவும் இருக்கின்றது. பூமியில் அதிக ஈரப்பசை இருந்தால் கிழங்கு பூமியிலேயே வாடி அழுகிவிடுகிறது.



பின் கருகல் நோய்

நோயைத் தடுக்கும் முறைகள் :

இந்த நோய் காற்றின் மூலமும், மழைத்துளிகள் மூலமாகவும் பரவுவதால் இதனைத் தடுக்க ஒரு சதவீத போர்டோ கலவை அல்லது டைத்தேன், டியூடர் அல்லது இதர தாமிரம் கலந்த பூசண மருந்தையோ பத்து நாட்களுக்கு ஒருமுறை பருவகால நிலையை அனுசரித்து நான்கு முதல் ஆறு தடவைகள் தெளித்தல் வேண்டும். நோய் வராமல் தடுக்க பின்வரும் பாதுகாப்பு முறைகளை கையாளுவது மிக அவசியம்.—

1. விதைக் கிழங்கு $1\frac{1}{2}$ முதல் 2 அவுன்சு எடையுள்ள தாகவும், நோயற்றதாகவும், சுத்தமாகவும் இருத்தல் அவசியம்.

2. விதைக் கிழங்கை நடுவதற்குமுன் அகலால், அரிட்டான் அல்லது இதர நனையும் பாதரசக் கலப்பு மருந்தில் (1 பவுண்டு மருந்தை 40 காலன் தண்ணீரில் கரைக்க வேண்டும்) நனைத்துவிட்டு நடவேண்டும்.

3. கிழங்கு முளைத்தவுடன் அல்லது நட்ட மூன்று வாரங்கள் கழித்து மருந்து தெளித்தலை ஆரம்பிக்க வேண்டும்.

4. இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அல்லது தேவைப் பட்டால் பத்து நாட்களுக்கு ஒருமுறை மருந்தைத் தெளித்து வரவேண்டும்.

5. நிலத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் மிகவும் அவசியம்.

6. உருளைக்கிழங்கு செடிகளை நன்கு காய்ந்தவுடன் தான் அறுவடை செய்ய வேண்டும்.

7. கிழங்கு முற்றிய பின்பும் செடிகள் பசுமையாக இருந்தால் அறுவடைக்கு பத்து நாட்களுக்கு முன்பாக செடிகளை அறுத்து எடுத்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

8. மழை இல்லாத நேரங்களில் கிழங்குகளை அறுவடை செய்து, நன்றாக உலர வைக்கவேண்டும். இல்லையேல் நோயினால் பாதிக்கப்படலாம்.

9. அறுவடை செய்யும்பொழுது நோய் தாக்குண்ட கிழங்குகளையும், அழுகிய கிழங்குகளையும் அப்புறப்படுத்தி நிலத்தில் ஆழமாக குழி தோண்டி அவற்றைப் புதைத்து விட வேண்டும்.

10. உருளைக் கிழங்கு அறுவடைக்கு பின் அதே நிலத்தில் உருளைக்கிழங்கு பயிரிடாமல் மாற்று பயிர் பயிரிடுவதின் மூலம் நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

நம் நாடும் உயர்ந்திடாதோ!

பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், சோளிங்கர்.

1. நல்லிளைஞர் கூட்டந்தான் கற்ற பின்னர்,
நலமாக வாழ்வதற்கு வேலைதேடி,
எல்லையிலா அரும்பாடு மிகவும்பட்டு,
ஏனிங்கு துன்பத்தைச் சுமக்க வேண்டும்?
நல்வளந்தான் தாங்கி நிற்கும் நிலத்தை நம்பி,
நலங்காண உழைப்பதற்கு முனைந்துவிட்டால்,
பல்வளமும் பெற்றிங்கே பசியும் நீங்கி,
பார்சிறக்க நம்நாடும் உயர்ந்திடாதோ!

2. ஏர்சிறக்கப் பார்சிறக்கு மென்றறிந்தே
எம்மரசு நலமாக இயற்றிவைத்த,
சீர்சிறக்கும் திட்டங்கள் வெற்றி கண்டால்
செம்மையுடன் வாழ்வதற்கு வழியுமுண்டு!
யார்நமக்குக் கடனளிப்பார்? யாது செய்வோம்?
என்றுழவர் ஏங்குவது இனியும் வேண்டாம்.
ஊர்சிறக்க வேண்டுமட்டும் உதவி செய்ய,
ஊராட்சி மன்றத்தை நாடிச் செல்வீர்!

3. பாழ்கிணறு செப்பனிட கடனளிப்பார்;
பழத்தோட்டம் வைப்பதற்குக் கடனளிப்பார்;
தாழ்வகலப் புதுக்கிணறு தோண்டுதற்கு
தடையின்றி உவகையுடன் கடனளிப்பார்;
ஆழ்கிணற்று நீரையுந்தான் கமலையின்றி,
இறைப்பதற்கு இயந்திரமும் கடன ளிப்பார்.
வாழ்வுயர வேண்டுவன பெற்று நீவிர்,
வளமெல்லாம் பெருக்குதற்கு தடையுமுண்டோ?

4. களர்நிலத்தைத் திருத்துதற்கு வசதி யுண்டு;
கதிருழக்காய் விளைந்திட நல்விதைகள் உண்டு
வளர்பயிரை யழிக்கின்ற பூச்சி யெல்லாம்,
வளராமல் அடியோடு அழிப்ப தற்கு,
தகவான மருந்துண்டு மருந்த ளிக்க,
தக்கதொரு விவசாயக் கிடங்கு முண்டு.
திட்டமதை நாம்புரிந்து கொள்ள வேண்டும்
தீவிரமாய்ச் செயலாற்ற வேண்டும் வேண்டும்.

5. எருவில்லை யெனுந்தொல்லை இனியுமில்லை!
இங்குண்டே கிளிரிசிடியா, சணப்பு எல்லாம்!
சருகுண்டு குப்பை உண்டு சாணம் சப்பை
சத்தான எருவாகும் சால நன்று
வளமான பயிராகி வளம் கொழிக்க
வாய்க்கின்ற செயற்கையுரம் பலவுமுண்டு
உரமிட்டுப் பயிருக்குக் காப்பளித்தால்
உன்னதமாய் விளைந்து செல்வம் பெருகிடாதோ!

6. புவியினிலே உழவினைப்போல் ஏற்றமுற்ற
புன்மையிலா நற்றொழில்தான் கண்டதுண்டோ?
கவிதையிலே ஔவை முதல் கம்பன் இன்றும்
கவிஞரோடு உழவினையே புகழ்ந்து ரைத்தார்!
செவிக்கினிய சேதி எனக் கேட்டு நின்றோம்
சிந்தித்தே நற்பணியைச் செய்கின்றோமா?
செயல் வேண்டும் எத்தொழிலும் செய்தல் வேண்
செய்திட்டால் நம்நாடும் உயர்ந்திடாதோ! [டும்

விவசாய இலாகாவிலிருந்து பாறை உடைக்கும் இயந்திரம் வாடகைக்கு பெறுவதற்கான விதிகள்

பாறைகளை உடைத்து கிணறுகளை ஆழப்படுத்த இயந்திரம்:

* கிணறுகளை ஆழப்படுத்தி அதிகத் தண்ணீர் பெற விவசாயிகளுக்கு பாறை உடைக்கும் இயந்திரம் வாடகைக்கு விடப்படுகிறது.

* பாறை உடைக்கும் இயந்திரத்துடன் பூமிக்கடியில் தண்ணீர் இருப்பதை அறிய $1\frac{1}{2}$ அங்குலம் முதல் 30 மீட்டர் வரையில் நீண்ட துளை போடுவதற்கான இயந்திரமும் வாடகைக்கு விடப்படுகிறது.

* பாறை உடைக்கும் இயந்திரத்தை உபயோகிக்கும் பொழுது நீண்ட துளைபோடும் இயந்திரத்தையும் பயன் படுத்தலாம்.

இவைகளைப் பெற வழி:

* உங்கள் பகுதி உதவி விவசாயப் பொறியாளர், அல்லது உதவி நெறியாளர் (டிரில்லிங்) எம். பி. ஷெட், நந்தனம், சென்னை–35 எவரையேனும் விசாரித்து விண்ணப்பம் பெறுங்கள்.

* விண்ணப்பங்களை பூர்த்தி செய்து பிணைப்பு முன் பணமாக ரூபாய் 100 செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.

* உதவி நெறியாளர் (டிரில்லிங்) ஒப்புதலின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மேல் வரிசைப் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* பின்பு இயந்திரத்தை வாடகைக்கு எடுத்துககொள்ள விண்ணப்பதாரர்களுக்கு உததரவுகள் அறிவிக்கப்படும்.

உத்தரவு பெற்ற பிறகு:

* உத்தரவு பெற்ற 5 நாட்களுக்குள் இயந்திரத்தை சொந்த செலவில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

* காலங் கடந்தால், உத்தரவு ரத்தாகும்; இயந்திரம் மற்றவருக்கு ஒதுக்கப்பட்டுவிடும்.

வாடகையும் செலுத்தும் முறையும்:

* விவசாயத்திற்கு கிணறு வெட்ட பாறை உடைக்கும் இயந்திரத்திற்கு ஒரு நாளைய வாடகை ரூபாய் 10 (ரூபாய் பத்துமட்டும்) மற்ற உபயோகத்திற்கு இக்கருவிக்கு ஒருநாள் வாடகை ரூபாய் 45/ ஆகும்.

துளைபோடும் கருவிக்கு, விவசாய உபயோகத்திற்கோ, மற்ற உபயோகத்திற்கோ ஒருநாள் வாடகை ரூபாய் 6 தான். இதற்கு குறைந்தபட்சம் ஐந்து நாட்களின் வாடகைப் பணத்தை முன்பணமாகக் கட்டவேண்டும். பின்பு அதிகபட்சம் எத்தனை நாட்களுக்கு வேலையிருக்குமோ, அத்தனை நாட்களுக்குரிய வாடகையை மறுபடியும் கட்ட வேண்டும்.

* முன் பணம் முடிந்ததும் மேற்கொண்டு இயந்திரத்தை வாடகைக்கு உபயோகிக்க விதிதப்படி வாடகை செலுத்த வேண்டும். இயந்திரத்தை இலாகா விடம் திரும்ப ஒப்படைக்கும் வரை உள்ள எல்லா நாட்களுக்கும் வாடகை செலுத்த வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் பாறை உடைக்கும் இயந்திரத்தை 150 நாட்கள் வரை வைத்துககொள்ளலாம். அதற்கு மேற் கொண்டு உபயோகிப்பதானுல் இயந்திரத்திற்கு இரட்டிப்பு வாடகை செலுத்து வேண்டும்.

கவனிக்க வேண்டியவை:

ஒதுக்கப்பட்ட இயந்திரத்தை விண்ணப்பதாரர்கள் பயன் படுத்தாமல் இருந்தால் இலாகாவிற்கு ஏற்படும் நஷ்ட தொகையை முன் பணத்தில் எடுத்துக்கொண்டு மீதி பணம்தான் திருப்பித் தரப்படும்.

முன்பணம் முடிந்ததும் மேற்கொண்டு முன்பணம் செலுத்தாமல் இருந்தால் இயந்திரம் உடனடியாக அகற்றப்படும். இயந்திரத்தை இயக்க தேவையான வெடிமருந்து பொருட்களையும் தேவையான கூலியாட்களையும் விண்ணப்பதாரர்கள் தான் தரவேண்டும்.

விண்ணப்பதாரரிடமிருந்து பாறை உடைக்கும் இயந்திரத்தையோ, துளைபோடும் இயந்திரத்தையோ, மேலும் வேலை செய்யவிடாது எந்தவிதக் காரணமுமின்றி திருப்பி எடுத்துக்கொள்வதற்கும், முன்பணம் பாக்கியைத் திருப்பித் தந்துவிடுவதற்கும, சென்னை வேளாண்மை நெறியாளருக்கு அதிகாரமுண்டு.

சலுகைகள்:

எதிர்பாராத விபத்தினுலும் அதிக மழையினுலும், விண்ணப்பதாரரால் கட்டுப்படுத்த இயலாத காரணத் தாலும், இயந்திரம் வேலை செய்யாது நிறுத்தப் பட்டால், வாடகை வசூலிக்கப்படமாட்டாது.

அரசினர் விடுமுறை நாட்களிலும் உள்ளூர் சந்தை நாட்களிலும், வேலை நிறுத்தப்பட்டால் இயந்திரத்திற்கு வாடகை இல்லை.

மோரிஸ் வாழை சாகுபடி

எஸ். இ. கோதண்டராமன், வாழைப்பயிர் தனிவிவசாய அலுவலர்.

வாழை பயிரிடுவதற்கு நல்ல வளமும் நீர்ப்பாசனமும் வடிகால் வசதியுமுள்ள ஆழமான மண் தேவை. இப் பயிர் மேட்டுப் பாங்கான நஞ்சை நிலங்களிலும் வளரும்.

வியாபாரத்திற்கேற்ற வகைகளில் மோரிஸ் வாழை ஒரு முக்கிய தினுசாகும். இதற்கு வாமனகேளி, குள்ளன், பஸ்ராய், காபூலி, கால்ஸ்மேரி, குட்ட வாழை, பச்சை வாழை என வேறு பெயர்களும் உண்டு. இந்த வாழை ரகம் வட ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இந்த பழத்திற்குப் பெங்களூர், சென்னை, பம்பாய் முதலிய இடங்களில் அதிக கிராக்கி இருக்கிறது

மோரிஸ் வாழை குட்டையாக இருப்பதால் அதிக காற்றும், புயலும் வீசும் இடங்களிலும் சேதம் அதிகம் ஏற்படாது. இதன் குலைகள் பெரியதாக இருப்பதால் சந்தையில் நல்ல விலைக்கு விற்கும். பயிரிடுவதற்கு ஒரு மாதம் முன்பே நிலத்தை 4 அல்லது 5 தரம் நன்ருக உழவேண்டும். கடைசி உழவின்போது எக்கருக்கு சுமார் 30 வண்டி நன்ருக மக்கின தொழு உரம் போடவும். அதன் பிறகு, 6 அடிக்கு ஒன்ருக $1\frac{1}{2}'$ நீளம், $1\frac{1}{2}'$ அகலம், $1\frac{1}{2}'$ ஆழம் உள்ள குழிகள் வரிசையாகத் தோண்டவேண்டும். இம்முறையில் எக்கருக்கு சுமார் 1,000 முதல் 1,200 குழிகள் வரை வெட்டலாம். இந்தகுழிகளில் வெட்டின மேல் மண்ணைப் போட்டு இலேசாக நிரப்பி வைக்கவேண்டும்.

பருவக்காலமும், நடவும்:

தைப்பட்டம், ஆடிப் பட்டம், கார்த்திகைப் பட்டம் — இம்மூன்றும் நடவுக்கு முக்கியமானப் பட்டங்கள் 3 அல்லது 4 மாத வயதுள்ள நோயற்ற கன்றுகளைத் தாய் மரத்திலிருந்து பிரித்த ஒரு வாரத்திற்குள் நடவேண்டும். கிழங்குகளை நடுவதற்கு முன் அவைகளை 0.1% நீரில்கரையும் செரிசான் என்னும் பூஞ்சாண மருந்தில் தோய்த்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

கன்றுகளை நட்ட ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குப்பிறகு கன்றுகளைச் சுற்றியுள்ள நிலத்தை மண்வெட்டியால் கொத்திக் களை எடுத்து விடவேண்டும். இந்த சமயத்தில் பட்டுப் போன கன்றுகளை எடுத்துவிட்டு அந்த இடத்தில் வேறு நல்ல கன்றுகளை முன் மாதிரியே நடுதல் அவசியம்.

நீர் பாய்ச்சுதல்:

15 நாட்களுக்கு ஒரு தரம் சீதோஷ்ணத்திற்கேற்றும் போதும் தண்ணீர் வசதியை ஒட்டியும் தண்ணீர்

பாய்ச்ச வேண்டும். கம்பம் பள்ளத்தாக்கு போன்ற மழை அடிக்கடி பெய்யும் இடங்களில் சுமார் 40 முதல் 50 தடவைகளும் மற்ற இடங்களில் சுமார் 60 முதல் 90 தடவைகளும் தண்ணீர் பாய்ச்ச அவசியம் ஏற்படும். வாழைத் தோட்டத்தில் தண்ணீர் தேங்கி நிற்காமலும், களை, பூண்டுகள் வளராமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கன்றுகளைச் சுற்றியுள்ள மண் கெட்டிப்பட்டுப் போகாமல் மண்வெட்டியினால் கொத்தினால் வேர்கள் சுலபமாய் பரவ உதவியாக இருக்கும். ஒரு வருடத்திற்கு 4 தடவை மண்வெட்டியினால் கொத்துவது நல்லது. முதல் கொத்து (களையெடுப்பு) நட்ட ஒரு வாரத்திலும், இரண்டாவது அதற்கு 15 நாட்களுக்குப் பின்னும், மூன்றாவது கொத்து நட்ட 6 மாதத்திலும், நான்காவது குலை தள்ளும் சமயத்திலும் அதாவது நட்ட சுமார் 8-வது மாதத்திலும் செய்யவேண்டும். வாழை குலை தள்ளிய பின் கொத்துவது கூடாது.



முட்டுக் கொடுத்தலும், கன்றுகளை பெயர்த்தலும்:

குலை தள்ளும் போது தாங்கச் சாயும் வாழைக்கு மூங்கில் கழிகளினால் முட்டுக் கொடுக்கலாம். காய்கள் உண்டானதும், எஞ்சியுள்ள மொட்டு பூவை ஒடித்து எடுத்துவிட வேண்டும். இம்மாதிரி செய்தால் குலை நன்றாக வளரும், சீக்கிரம் முற்றும். தாய் மரத்தின் பக்கத்தில் வளரும் ஒரேஒரு சிங்கனை மட்டும் வளரவிடலாம். மற்றவைகளை தாய் மரம் பூவிட ஆரம்பிக்கும் முன்னரே அகற்றிவிட வேண்டும்.

உரமிடுதல் :

நட்ட இரண்டாவது அல்லது மூன்றாவது மாதத்தில் வாழைக்கு ஏக்கருக்குப் பத்து வண்டி வீதம் நன்றாக மக்கின தொழு உரம் போட வேண்டும். பிறகு நட்ட நான்காவது மாதம் முதல்தடவையாக ஒரு மாதத்திற்கு அரை மீட்டர் சுற்றளவு தூரத்தில் கடலைப் பிண்ணாக்கு, அம்மோனியம் சல்பேட், மியூரியேட் ஆப் பொட்டாஷ், சூப்பர் பாஸ்பேட் முதலிய உரங்களை ஒவ்வொன்றும் $\frac{1}{4}$ கிலோ வீதம் கலந்து வைக்கவும் வேண்டும்.

நட்ட 7-வது மாதம் இரண்டாவது தடவையாகச் செடியிலிருந்து முக்கால் மீட்டர் சுற்றளவு தூரத்தில் முன் மாதிரியே கடலைப் பிண்ணாக்கும், அம்மோனியம் சல்பேட்டும் தலா அரைக் கால் கிலோவும், பொட்டாஷ் கால் கிலோவும் வைக்க வேண்டும். உரமிடும் சமயங்களில் பூமியில் போதிய ஈரமிருக்க வேண்டும்.

போதுமான உரமிட்டு நீர்ப்பாய்ச்சுவதால் வாழை நன்றாக வளர்வதுடன் சீக்கிரமும் குலை தள்ளும். காய்கள் எண்ணிக்கையும் பருமனும் அதிகரிக்கும்.

அறுவடை :

மோரீஸ் வாழை நட்ட 8 அல்லது 9-வது மாதம் குலை தள்ளும். தார் 2 அல்லது $2\frac{1}{2}$ மாதத்திற்குள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும். தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று மாதம் வாழை குலைகளைத் தோட்டத்திலிருந்து வெட்டலாம். வெளியூர்களுக்கு அனுப்பும் குலைகளை காய்கள் கெடாதபடி, வாழைச் சருகிலேயே பார்சல் செய்து அனுப்பலாம்.

[28-ம் பக்கம் பார்க்க

டாடா பைஸன் மற்றும் ராலி
பாட்டுப் பாடுகிறுர்கள் !
டாடா : ஒன்று இரண்டு பேருக்கே ..
பைஸன் : இரண்டு நாலு பேருக்கே...
ராலி : உண்டு டீ அணிவருக்கே !
டாடா : ஒன்று சேருவோம் மூவரும்
பைஸன் : விவசாயி நாம் யாவரும்...
ராலி : நலன் விளையும் மாபெரும்.
டாடா: (மெதுவாக) ஆம். விளையும். ராலீஸ் 'மரம் மார்க்' உரங்கள் மேலும் சிறந்த தேயிலைப் பயிர் விளைய உதவுகிறது. டாடா பைஸன் பூச்சி மருந்துகள் அமோகமான விளைச்சல் தர அதைப் பாதுகாக்கிறது.
TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES
டாடா பைஸன் ராலீஸ் பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது
SHBI.RF.38.TAM.

போதிய இடைவெளிவிட்டு தென்னை நடுங்கள்

கே. எஸ். சண்முகம், பி.எஸ்ஸி. (வேளாண்மை), விவசாய விஸ்தரிப்பு அலுவலர், கீழப்பாவூர்.

கோணுத தென்னை

"கோணுத தென்னை மரம் கண்டாருமில்லை கொக்கின் இளங்குஞ்சு கண்டாருமில்லை" என்பது பாண்டிய நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. தென்னை மரம் ஏன் கோணலாக வளருகிறது? தென்னைக் குடும்பத்தைச் (Palmal) சேர்ந்த பனை, பாக்கு முதலியன மட்டும் நேராக வளருகின்றனவே அது ஏன்? இந்த கேள்விகளுக்கு விடை இதுதான்.

தென்னை மரம் அதிக சூரிய ஒளியை விரும்பும் மரம். தமிழகத்தில் தென்னையை தகுந்த இடைவெளி விட்டு நடுவதில்லை. இவ்வாறு தகுந்த இடைவெளி விடாமல் நெருக்கமாகத் தென்னைகளை நடுவதால் அவைகளுக்கும் போதிய சூரிய ஒளி கிடைப்பதில்லை. சூரிய ஒளியைப் பெறுவதற்காக மரத்திற்கு மரம் ஏற்படும் போட்டியில் தென்னை தனது நேராக உருவத்தை இழந்து வளைந்து நீண்டு வளருகிறது. இதனுல்தான் "கோணுத தென்னை மரம் கண்டாரில்லை". தகுந்த இடைவெளியிட்டு நட்டால் தென்னை மரம் 'கோணுமல்' வளரும்.

தமிழகத்தில் "வாழைக்கு எட்டடி, தென்னைக்கு பதினுறடி" என்று ஒரு பழமொழி இருப்பதாகக் கூறுகிறுர்கள். வாழையைப் பொருத்தமட்டில் எட்டடி இடைவெளி சரிதான். ஆனுல் தென்னையின் இடைவெளி பற்றிய கணக்குத்தான் தவறு. இப்பழமொழியை வழிகாட்டியாகக்கொண்டு அநேகர், 15, 16 அடி இடைவெளி விட்டு இன்றளவும் தென்னையை நட்டு வருகிறுர்கள். நான் "25 அடி இடைவெளிவிட்டு தென்னையை நடுங்கள்" என்று கூறியபோதெல்லாம் அவர்கள் இந்தப் பழமொழியையே என்னிடம் மாருமல் சொன்னுர்கள். ஆனுல் பழமொழியையும் தாண்டி பயனுள்ள உண்மையைத் தெரிந்தோரும் இல்லாமல் இல்லை. நான் சமீபத்தில் ஒரு முஸ்லீம் பெரியவரைச் சந்தித்தேன். அவர் நீண்டகாலமாக தென்னை சாகுபடி செய்து வருவதாக அவரை எனக்கு அறிமுகம் செய்த என் நண்பர் கூறினுர். அவரிடம் தென்னைக்கு விடவேண்டிய இடைவெளியைப்பற்றி அவருடைய கருத்தைக் கேட்டபோது அவர் சொன்ன பதில் எனக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டியது. அவர் சொன்ன பதில் இதுதான் "தென்னைக்கு 25 அடி முதல் 30 அடி வரை இடைவெளி விட வேண்டும்." அதற்கு மேற்கோளாக அவரும் ஒரு முதுமொழியைக் கூறினுர். "அணில் தாண்டாத மரம் ஆயிரம் இருந்தால் அவன் அரசனுக்கு சமம்." அப்பழமொழிப்படி "அணில் தாண்டாத மரமாக" இருக்க வேண்டுமானுல் அதன் இடைவெளி 25 அடிக்குச் சற்றும் குறையாமலிருக்க வேண்டும். போதிய இடைவெளி விட்டு நடுவதால் தென்னை அதிக மகசூல் தருகிறது. அதன் மூலம் ஒருவர் அரசனுக்கு சமமான செல்வம் ஈட்டலாம் என்ற கருத்தையுடைய இப் பழமொழி தென்னைக்கு போதிய இடைவெளியின் அவசியத்தை நன்கு விளக்குகிறது.

தென்னையை நெருக்கி நட்டால் லாபம் குறையும்.

அதிக தென்னை மரங்களிருந்தால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவற்றின் மூலம் அதிக தேங்காய்கள் கிடைக்கும் என்று எண்ணுகிறுர்கள். இது ஒரு தவறுன எண்ணம். உண்மையில் நெருக்கமாக நடப்பட்ட தென்னைகள், போதிய இடைவெளிவிட்டு நடப்பட்ட தென்னைகளைவிட குறைவாகவே காய்க்கின்றன. மேலும் அவைகள் அதிக நாட்கள் கழித்தே காய்க்கத் தொடங்குகின்றன.

ஒரு தென்னை மரத்தோப்பின் மதிப்பு அதிலுள்ள மரங்களின் எண்ணிக்கையைக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுவதால் தோப்பின் மதிப்பை உயர்த்தும் பொருட்டு அதிக தென்னைகளை மிக நெருக்கமாக நடுகிறுர்கள்.

ஒரு தென்னந்தோப்பை அதிலிருந்து வெட்டும் தேங்காய்களின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிட வேண்டுமேயொழிய மரங்களின் எண்ணிக்கைக் கொண்டு மதிப்பிடக் கூடாது. மரங்களின் எண்ணிக்கைக் கொண்டு மதிப்பிட்டால் மிகக் குறைவாக காய்க்கும் மரங்களையும், நன்கு காய்க்கும் மரங்களையும் ஒரே சமமாக மதிக்க வேண்டியது ஏற்படுகிறது. இந்த மதிப்பீடு மிகவும் தவறுனதாகும்.

ஏன் தென்னைக்குப் போதிய இடைவெளி விடவேண்டும்

தமிழ்நாடு வேளாண்மைத் துறை தென்னைக்கு 25 அடி இடைவெளி விடவேண்டும் என சிபார்சு செய்கிறது. ஏன் தென்னைக்கு இவ்வளவு அதிக இடைவெளி (25 அடி) விடவேண்டும். மா, பலா, புளி, போன்ற மரங்களைப் போல் தென்னை விரிந்து, பரந்து வளர்வதில்லையே என்று பலர் சிந்திக்கின்றனர். கீழே கொடுத்துள்ள காரணங்களைப் படியுங்கள் :—

(1) முன்பே கூறியபடி தென்னை அதிக சூரிய ஒளியை விரும்பும் மரம். ஆகையால் நெருக்கமாக தென்னையை நட்டால் சூரிய ஒளியை கிரகிப்பதற்காக மரத்திற்கு மரம் போட்டி ஏற்பட்டு மெலிந்து நெடிந்து வளைந்து வருகிறது. இவ்வாறு உயரமாக வளைந்து வளருவதற்கு அதிகமான தாவர உணவு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு வளைவதற்கு வேண்டிய சத்தானது தென்னை வளர்ச்சிக்கே பயன் படுத்தப்படுவதால் விளைச்சல குறைகிறது. மேலும் போதிய இடைவெளி விட்டு நடப்பட்ட தென்னைகள் உரிய காலத்தில் (6 முதல் 8 வருடங்களில்) நல்ல பலன் தருகின்றன. ஆனால் நெருக்கமாக நடப்பட்ட தென்னைகள் காலம் தாழ்த்தி (12 முதல் 15 வருடங்கள்) பலன் தருகின்றன.

(2) நெருக்கமாக நடப்பட்ட மரங்களின் தண்டு பாகம் சூரிய வெளிச்சத்திற்காக போட்டியிடும்போது, அவைகளின் வேர் பாகம் உணவிற்கும், நீருக்கும் போட்டியிடுகின்றன. இப்போட்டிகளினால் மரங்களின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டு, மகசூலும் குறைந்து விடுகின்றது. மரங்களும் காலம் தாழ்த்தியே பலன்தர ஆரம்பிக்கின்றன.

(3) நெருக்கமாக நடப்பட்ட தென்னை மரங்களின் ஓலைகள், நன்ருக படர்ந்து, விரிந்து வளருவதற்கு இடமில்லாதிருந்தால், மரத்தை வெட்டி நெருங்கி நேராக மேல் நோக்கி வளர்கின்றன. அதனால் மரத்தின் தண்டு பாகத்திற்கும், ஓலையின் அடி மட்டைக்கும் உள்ள இடைவெளி குறைகின்றது. அதனால் அந்த இடைவெளிகளில் வளரும் பாளைகள் நன்ருக முதிர்ந்து விரிவதில்லை. பூக்கள் போதிய வளர்ச்சியடையுமுன்பே உதிர்ந்து விடுகின்றன. அதனால் அதிகக் காய்கள் பிடிப்பதில்லை. மகசூல் குறைந்து நஷ்டம் ஏற்படுகிறது.

(4) நெருக்கமாக நடப்பட்டுள்ள தென்னைகளுக்கு அதிக உரமிட்டு, அதிக நீர்பாய்ச்ச வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அதனால் செலவும் உழைப்பும் அதிகமாகின்றது. ஆனால், பலனே அதற்கேற்றாற்போல் அதிகமாகக் கிடைப்பதில்லை.

(5) நெருக்கமாக நடப்பட்டுள்ள தென்னந்தோப்புக்களில் ஒவ்வொரு தனிப்பட்ட மரத்திற்கும் போதிய வளர்ச்சிக்கான சத்து கிடைக்காமையால் அம்மரங்கள் பலவீனமுற்று குருத்தழுகல், இலையழுகல், குரும்பை யுதிர்தல், போன்ற நோய்களுக்கு இலக்காகுகின்றன. தென்னைகள் ஒட்டி ஒட்டியிருப்பதே இந்த நோய்கள் சுலபமாக பரவுவதற்கு முக்கிய காரணமாகும்.

(6) நெருக்கமாகத் தென்னைகளுள்ள தோப்புக்களில் ஒரு மரத்தின் ஓலைகள் மற்றொன்றின் ஓலைகளைத் தொட்டுக்கொண்டு இருப்பதால், எலி, மற்றும் அணில் முதலிய பிராணிகள் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு மிகச் சுலபமாகத் தாண்டிச் சென்று தென்னை குடும்பைகளை மிகுந்த அளவில் சேதப்படுத்துகின்றன.

(7) தென்னையைப் போதிய இடைவெளி விட்டு நட்டால் சுலபமாக குறைந்த செலவில் ஊடு சாகுபடி செய்யலாம். மேலும் மரங்களின் இடையில் போதிய இடைவெளி இருப்பதால் அவைகள் பலன் கொடுக்க ஆரம்பிக்கும்வரை இடைவெளியில் காய்கறி பயறு வகைகள், மிளகாய், மஞ்சள், இஞ்சி, வள்ளிக்கிழங்கு போன்றவற்றை ஊடு பயிராக சாகுபடி செய்யலாம். அதன் மூலம் கிடைக்கும் ஊதியம் தென்னை பலனுக்கு வரும் வரையுள்ள செலவுகளை ஈடுசெய்யும்.

போதிய நீர்ப்பாசன வசதியில்லாவிடில், பசுந்தாளுரப் பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்யலாம். அவைகள் உரத்திற்காகச் செய்யும் செலவை குறைப்பதுடன் குறைந்த செலவில் நிலத்தை மிக்க வளமுள்ளதாக்கி மகசூலை அதிகரிக்கச் செய்து வருமானத்தைப் பெருக்குகிறது.

தென்னைக்கு விட வேண்டிய சரியான இடைவெளி என்ன ?

மிகுந்த அளவில் தென்னை சாகுபடி செய்யும் பல நாடுகள் பலவித இடைவெளிகள் விட்டுத் தென்னை நடுகின்றன. உதாரணமாக :

இலங்கை	8 மீட்டர்	சுமார் 27 அடி
மலேயா	9 மீட்டர்	சுமார் 30 அடி
இந்தோனிஷியா	10 முதல் 11 மீட்டர்	34 அடி
பிரிட்டிஷ் கினியா	9 மீட்டர்	30 அடி
தமிழ்நாடு வேளாண்மைத் துறை சிபாரிசு	7·6 மீட்டர்	25 அடி

இதிலிருந்து தெரிவது பல இடங்களிலும் தென்னைக்கு விட வேண்டிய இடைவெளியை நிர்ணயம் செய்யும்போது கவனிக்க வேண்டியவைகள்.

திரு. பிரிட்டான் ஜோன்ஸ் "மரங்களுக்குத் தேவையான அளவு உணவைக் கொடுக்கக்கூடிய நிலப்பரப்பு ஒவ்வொரு தென்னைக்கும் கிடைக்குமாறு இடைவெளி விட வேண்டும்" என்கிருர். இக்கருத்தின்படி வளமுள்ள வண்டல் மண் பிரதேசத்தில் குறைந்த நிலப்பரப்பிலேயே மரங்களுக்குப் போதிய உணவு கிடைக்குமாதலால் அங்கு குறைந்த இடைவெளியும் வளமற்ற மணற் பிரதேசத்தில் அதிக இடைவெளியும் கொடுக்க வேண்டும். தமிழ்நாடு வேளாண்மை துறை சிபாரிசு செய்யும் 7·6 மீட்டர் (25 அடி) இடைவெளி எல்லா நிலங்களுக்கும் ஏற்ற மிகச் சிறந்த இடைவெளியாகும்.

நெட்டை ரகத் தென்னைக்கு 7·6 மீட்டர் இடைவெளியும் குட்டை ரகத் தென்னைக்கு 6-0 மீட்டர் (20 அடி) இடைவெளியும் போதுமானதாகும்.

சாலைகளின் இருமருங்கிலும் வயல் வரப்புக்களிலும், வாய்க்கால் கரைகளிலும் ஒற்றை வரிசை நடவு முறையில் நடுவதால் 6·0 மீட்டர் (20 அடி) இடைவெளி போதுமானதாகும்.

2. நடவு முறைகள்.—தென்னையை சதுர முறை நடவு. முக்கோண முறை நடவு என்ற இருமுறைகளில் நடலாம்.

சதுர முறை





சதுர முறை:—சதுர முறையில் சதுரத்தின் நான்கு மூலைகளிலும் சம தூரத்தில் தென்னம்பிள்ளைகள் வைக்கப்படுகின்றன. வரிசையிலுள்ள மரங்களின் தூரமும், வரிசைகளுக்கிடையே உள்ள தூரமும் சமமே.

முக்கோண முறை





சமபக்கமுக்கோணம்

முக்கோண முறை.—இம்முறை நடவில் ஒரு சமபக்க முக்கோணத்தின் மூன்று மூலைகளிலும், தென்னம் பிள்ளைகள் நடப்படுகின்றன. முக்கோண முறையில், சதுர முறையைவிட 15 சதவிகிதம் அதிகமான தென்னம்பிள்ளைகள் நடலாம். கீழ்காணும் அட்டவணை ஒரு ஏக்கரில் நடக்கூடிய மரங்களின் எண்ணிக் கையைக் காண்பிக்கின்றது.

ஒரு ஏக்கரிலுள்ள மரங்கள்.		மரங்களுக்கிடையே உள்ள தூரம்.	
சதுர முறை.	முக்கோண முறை.	மீட்டர்.	அடி.
(1)	(2)	(3)	(4)
70	80	7.6	25
64	74	8·0	26
60	69	8.3	27
56	64	8·6	28
52	60	8·9	29
48	56	9·2	30

போதிய இடைவெளிவிட்டு நடும் தென்னந்தோப்புகள் தான் அதிக லாபம் தரும் என்பது திண்ணம். அதை ஒப்புக்கொண்டால் ஒரு கேள்வி. "நெருக்கமாக நடப்பட்டு விட்ட தோப்பை சீர்படுத்துவது எப்படி ? அது முடியுமா? முடியாதா ? நல்ல வேளையாக சந்தேகத்திற்குரிய இந்தக் கேள்விக்கு "முடியும்"—என்பதே பதில் ஆம் நெருக்கமாக நடப்பட்டு, காய்த்துக்கொண்டிருக்கும் தோப்புகளையும் திருத்திவிடலாம்.

நெருக்கமாக நடப்பட்டுள்ள தென்னந் தோப்புக்களை சீர்படுத்துவது எப்படி?

1. நெருக்கமாக நடப்பட்டுள்ள தென்னந்தோப்புகளிலுள்ள அதிக வயதான அதிக பலன் தராத மரங்களை வெட்டி விடலாம்.

2. நன்கு பலன் தரும் இளவயது மரங்களாயிருந்தால் மழை காலத்தில் அவற்றை வேருடன் பிடுங்கி வேறு இடங்களில் நடலாம். 10 வயதிற்குட்பட்ட மரங்களைப் பிடுங்கி நடுவது சுலபம். ஆனால் வயது முதிர்ந்த மரங்களை பிடுங்கி நடும்போது மிகுந்த கவனம் தேவை.

மரங்களைப் பிடுங்கி நடுவதற்காகத் தோண்டப்படும் குழிகளை 4 முதல் 5 அடி ஆழமும், அகலமும் கொண்டதாக தோண்டி ஒரு மாதம் ஆறப் போடவேண்டும். மழைகாலத்தில் மரங்களை கவனமாக வேருடன் பிடுங்கி நடவேண்டும். நன்கு மக்கின தழை உரம் அல்லது தொழு உரம் போட்டு நன்கு நீர் விடவேண்டும்.

மூன்று கிலோகிராம் அமோனியம் சல்பேட்டும், மூன்று கிலோகிராம் சூப்பர் பாஸ்பேட்டும் போட்டால் மரம் மிக எளிதில் வேரூன்றித் தழைக்கும்.

"போதிய இடைவெளி விட்டு தென்னை நட்டு அதிக லாபமடையுங்கள்."

கேள்வியும் பதிலும்

(எம். கே. லிங்கையா, விரிவினை வல்லுநர்; கே. எஸ். குட்டி முதலியார், உதவி விரிவினை வல்லுநர்; த. சோமசுந்தரம், விரிவினை விளக்குனர்)

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம், கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

திரு. பி. சுப்பராய முதலியார்
கோவிங்கபுரம்
வாலாஜா வட்டம் (N. A.)

வினா: 1. தாங்கள் மேழிச்செல்வத்தில் குறிப்பிடுவது போல் விவசாயம் செய்ய மிகவும் ஆவலாகத்தான் உள்ளது. ஆனால் கேட்கும் அளவு உரங்கள் கிடைக்கவில்லையே? கேட்கும் அளவில் 5 சத வீதம் கிடைப்பதே கஷ்டமாக உள்ளதே? தேவையான அளவுக்கு உரங்கள் எப்போதும் கிடைக்க யாரை அணுக வேண்டுமென்ற விபரம் எழுதக் கோருகிறேன்.

விடை: தங்கள் கடித நகலொன்று மாவட்ட விவசாய அதிகாரி, ராணிப்பேட்டைக்கு அனுப்பப்பட்டு தங்களுக்கு இரசாயன உரம் கிடைக்க உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வினா: 2. மணிச்சத்து என்பது என்ன உரம்? அது தனிப்பட்டதா? அல்லது கலப்புரமா?

விடை: பெயரிலிருந்தே அறியப்படுவதுபோல் 'மணிச் சத்து' என்பது மணிகளின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக்கூடிய தனியான தானியச் சத்துத்தான். இச்சத்துள்ள உரங்களாவன: சூபர் பாஸ்பேட், போன்மீல், அம்மோனியம், பாஸ்பேட் முதலியனவாகும்.

வினா: 3. அரசாங்கத்தார் விவசாயத்துக்கென்று ஒதுக்கும் தொகையோ பெரிது. செய்யும் முயற்சிகளோ மிக மிகப் பெரியவை. கிணறுகள் பல எடுத்து தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் மனம் சலித்து விடுகிறார்கள். ஆகையால் அரசினராலேயே இலவசமாக நீர் ஊற்றுக் கண்டுபிடிக்கும் நிபுணர் (டிவைனர்) வட்டத்துக்கு ஒருவரை நியமித்து உதவக்கூடாதா?

விடை: நீர் ஊற்று கண்டுபிடிக்கும் கலைக்கு ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட முறைகள் என்று ஒன்றும் கிடையாது. எனவே இக்கலையில் உண்மையான நிபுணர்கள் யார் என்று கண்டறிய முடியாது! இக்கலையே வளர்ச்சி அடையாத இந்நிலையில் வட்டத்துக்கு ஒருவராக இத்தகைய நிபுணர்களை எப்படி அரசினர் நியமிகக இயலும்?

திரு ஐ. ஆர். முருகேசன்
அமராபதி புதூர்.

வினா: 4. எங்கள் ஊரில் (கிராமத்தில்) (10) ஊர்களுக்கு அரசாங்கத்தின் விலையில் உரம், அம்மோனியம், சல்பேட், யூரியா விவசாயிகளுக்கு கிடைப்பிது இல்லை, இதனால் நல்ல முறையில் மாசூலை கொண்டுவர முடியவில்லை. ஆகையால் உடனே யாரிடத்தில் கேட்கவேண்டும் என்பதை தெரியப் படுத்தவேண்டும்.

விடை: இரசாயன உரங்கள் கிடைக்க உங்கள் வட்டார வளர்ச்சி அதிகாரியையோ அல்லது விவசாய விரிவு அதிகாரியையோ அணுகுங்கள்.

வினா: 5. அத்துடன் உங்கள் மேழிச்செல்வம் கிடைக்க வருடாந்திர சந்தா எந்த முகவரிக்கு அனுப்பலாம் என்பதையும் தெரிவிக்கவும்.

[30-ம பக்கம் பார்க்க]

கைத்தொழில் பொருள்களினால் இன்பமான இல்லங்கள்



உங்கள் வீட்டில் உள்ள கைத்தொழில் பொருள்கள் வசதியின் மற்றும் மகிழ்ச்சியின் சின்னங்களாக விளங்குகின்றன. பல்வேறு பருவ காலங்களுக்கும், குணங்களுக்கும் ஏற்றபடி அமைந்துள்ள இப் பொருள்களில் வேலைத்திறன் பிரதிபலிக்கின்றன. புராதன கலை அழகும். நவீன நாகரீகமும் ஒருங்கே கொண்ட பொருள்கள் இவைகள். சிறப்பாக அச்சடிக்கபபடட திரைச்சீலைகள், கண்ணைப் பறிக்கும் வண்ணங்களிலும், மோஸ்தர்களிலும் உள்ள ஜமுக்காளங்கள், அக்ரோட்டு மர மேஜைகள், நீல நிற மண் பாண்டங்கள், களிமண் பொம்மைகள், நிர்மல் வேலைப்பாடுடன் கொண்ட பொருள்கள், அலங்காரத் திற்கேற்ற தந்த சாமான்கள், இன்னும் எவ்வளவோ, ஒவ்வொன்றும் தனிச்சிறப்பை கொண்டுள்ளன.

அகில இந்தியக் கைத்தொழில் போர்டு

DA·66/293



வானொலிச் செய்திகள்

பருத்தி தீவிர சாகுபடித் திட்டம்

திரு. என். ரங்கநாதாச்சாரி, மாநில பருத்தி பெருக்க அலுவலர் அவர்களின் 12—8—66-ந் தேதிய உரையின் சுருக்கம்.

பருத்திப் பயிர் ஏக்கருக்கு சராசரி பஞ்சு மகசூல் எகிப்தில் 253 கிலோ, பாகிஸ்தானில் 104 கிலோ. ஆனால் இந்தியாவிலோ 52 கிலோ பஞ்சுதான் மகசூல்.

இக் குறைந்த மகசூலை மிக விரைவில் அதிகப்படுத்துவதற்காக வகுக்கப்பட்டதுதான் தீவிர பருத்தி சாகுபடித் திட்டம்.

பருத்தித் தீவிரச் சாகுபடி திட்டம் தமிழ்நாட்டில் 1963, 1964–65 வருடங்களில் நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. தற்போது கோவை மாவட்டத்தில் கோவை, அவினாசி பிராந்தியங்களில் 70 ஆயிரம் ஏக்கராவிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப் புத்தூர் பிராந்தியத்தில் 30 ஆயிரம் ஏக்கராவிலும் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் பிராந்தியத்தில் 30,000 ஏக்கராவும், மேலும் திருச்சி மாவட்டத்தில் திருச்சி பிராந்தியத்தில் 15 ஆயிரம் ஏக்கரிலும் செயல் பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்பட்ட இடங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் சுமார் 59·1 முதல் 60·2 சதவீதம் வரை சராசரி ஏக்கர் மகசூல் அதிகப் பட்டு இருக்கிறது.

இத் திட்டத்தில் கீழ் இறவைக் கம்போடியா பருத்தி ரகங்களுள் எம்சியு. 1-ம், எம்சியு. 3-ம் குளிர்காலத்தில் பயிர் செய்யவும் (புரட்டாசிப் பட்டம்), எம்சியு. 2 கோடை காலத்தில் பயிர் செய்யவும் (மாசிப்பட்டம்) சிபாரிசு செய்யப்படுகிறது. நெல் விளையும் பிராந்தியங்களில் நெல் அறுவடைக்குப் பிற்பாடு குறுகிய காலத்தில் விளையக்கூடிய பி 216 எஃப் (P 216 F) என்ற ரகம் கோடை (மாசிப்பட்டம்) காலத்திற்கு ஏற்றது.

திட்டத்தில் சாகுபடிக்கு சிபாரிசு செய்யும் கட்டுக்கோப்பு முறைகள்.—சாகுபடிக்கு "பாத்திமுறை"யை விட "பார்முறை"யே ஏற்றது. முக்கால் மீட்டர் இடைவெளி யுடன் பார்கள் அமைக்கவேண்டும். பாரின் சரிவில் 25 முதல் 30 சென்டிமீட்டர் இடைவெளி விட்டு பருத்தி விதைகள் ஊன்றவேண்டும். குழிக்கு 2 செடிகள் நிற்பதற்குண்டான ஏற்பாடு செய்யவேண்டும். இதனால் செடிகளின் அளவுக்கு மீறிய வளர்ச்சி கட்டுப்படுத்தப் பட்டு மகசூலும் அதிகரிக்கிறது. விதைகளை "அக்ரசான்" என்ற நோய் தடுப்பு மருந்துடன் கலந்து விதைக்க வேண்டும்.

நன்கு மக்கிய தொழு உரம் 5 டன் அளவும், 140 கி. கி. அமோனியம் சல்பேட் அல்லது 62 கி. கி. யூரியாவும், 88 கி. கி. சூப்பர் பாஸ்பேட்டும், 24 கி. கி. பொட்டாஷ் உரமும் ஒரு ஏக்கர் பருத்திச் சாகுபடிக்குத் தேவை. மேற்சொன்னவற்றில் தொழு உரமும், சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களும் கடைசி உழவிற்கு முன் இடப்படவேண்டும். இதைத் தவிர, தழைச்சத்துக் கொடுக்கக்கூடிய அமோனியம் சல்பேட், கால்சியம், அமோனியம் நைட்ரேட், யூரியா போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை தேவைப்படும் அளவில் ஒரு பகுதியை கடைசி உழவிற்கு முன் இடவேண்டும். மிஞ்சிய பகுதியை செடிகள் முளைத்த 40-ல் இருந்து 45 நாட்களில் இட வேண்டும். இரசாயன உரம் இட்ட பிறகு உடனடியாக போதிய அளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பருத்தி தீவிர சாகுபடித் திட்டம்.—பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் செயல்படும் வட்டாரங்களில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 250 வீதமும் நபர் ஒன்றுக்கு ரூபாய் 2,000 வரை நபர் ஜாமினிலும், ரூபாய் 10,000 வரை நில ஈட்டின் பேரிலும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் சாகுபடி கடன் கொடுக்கப்படுகிறது. இக் கடன் தேவைக்கு ஏற்ப விதை, மருந்துகள், இரசாயன உரங்கள் முதலியனவாக (ஏக்கருக்கு ரூபாய் 70)வும், சாகுபடி செலவிற்காக ரொக்கமாகவும் (ஏக்கருக்கு ரூபாய் 180)-ம் வழங்கப்படுகிறது.

ராகியில் அமோக விளைச்சலுக்குத் தீவிர சாகுபடி குறிப்புகள்

திரு. கணபதி, விவசாய நெறியாளரின் தனி உதவியாளர். அவர்களின் 5—8—66-ந் தேதிய உரையின் சுருக்கம்.

கேழ்வரகு பயிரில் கே. 7, கே. 2 ரகங்கள் அதிக விளைச்சல் கொடுக்கக்கூடியவையாகும்.

சாதாரணமாக ஏக்கர் மகசூல் 1,100 முதல 1,350 கிலோ இருக்கிறது. அதே சமயம், விவசாயிகளின் வயல்களில் நடத்திய நிரூபணங்களில் 2,250 கிலோ வரை சாகுபடி செய்யமுடியும் என்று தெரிகிறது.

ரூ. 500 மட்டும் சாகுபடி செலவு செய்து நிகர லாபம் ரூ. 1,200 கிடைக்கும். இந்த நிரூபணங்களில் ஹெக்டேருககு 5,202 கிலோ மகசூல் கிடைத்தது அதாவது ஏக்கருக்கு 2106 கிலோ அல்லது 4,630 ராத்தல் ராகி கிடைத்தது. ஹெக்டருக்கு 70 வண்டி அதாவது ஏக்கருக்கு 28 வண்டி கேப்பைத் தட்டையும் கிடைத்தது.

தேசீய நிரூபணத்தில் அனுசரிக்கப்பட்ட முறைகளை அனுசரித்து ராகியில் அமோக விளைச்சலை அடைவதற்கு கீழ்க்கண்ட கட்டுக்கோப்பான சாகுபடி முறைகள் சிபாரிசு செய்யப்படுகிறது.

மேற்கூறிய அமோக விளைச்சலுக்கு முதல் நாற்றங் கால் தயாரிப்பதிலும் நாற்றை பராமரிப்பதிலும் கீழ் கண்ட முறைகளை அனுசரிக்க வேண்டும்.

ஏக்கருக்கு 3 சென்ட் வீதம் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும்; ஏக்கருக்கு 5–6 தடவை உழுது புழுதி ஆக்கவேண்டும். ஏக்கருக்கு 20 வண்டி மாட்டுரமும் 7 வண்டி சாம்பலும் அவசியம். கோ. 7 போன்ற அதிக மகசூல் கொடுக்கும் ரகங்களை உபயோகிக்கவேண்டும். விதையுடன் ஒரு கிலோவிற்கு 2 கிராம் வீதம் அக்ர சானை கலக்க மறக்கக்கூடாது; சென்டிற்கு ½ கிலோ வீதம் விதையை பாத்திகளில் விதைத்து மண்ணில் விரவி தண்ணீர் கட்டவேண்டும்; 4–5 நாட்களுக்குப் பிறகு முளைத் தண்ணீர் கட்டவேண்டும்; நாற்றுக்கள் 10–15 நாட்கள் வளர்ந்ததும் செண்டிற்கு ½ கிலோ வீதம் கால்சியம் அமோனியம் நைட்ரேட் போடவேண்டும். நாற்றுக்களை விதைத்து 25–30 நாட்களில் பிடுங்கிநட வேண்டும்; நாற்றைப் பறிப்பதற்கு முன்பு டி.டி.டீ. 50 சதமும் தாமிர பூஞ்சாண மருந்தும் கலந்த கலவையை தெளிக்கவேண்டும். அல்லது நாற்றை நடுவதற்கு முன்பு அக்கலவையில் தோகையை நனைத்து நடவேண்டும்.

நாற்று நடுவதற்கான நிலத்தை தயார் செய்வதிலும் பயிரை பராமரிப்பதிலும் கீழ்க்கண்ட நேர்த்திகளைக் கையாளவேண்டும்.

நிலத்தை 5–6 முறை உழவேண்டும்; ஏக்கருக்கு 20 வண்டி வீதம் மாட்டுரமிடவேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் 88 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரங்களை கலந்து போடவேண்டும். பாத்திகள் கட்டவேண்டும். பாத்திகளில் நீர் பாய்ச்சவேண்டும். 6 அங்குல இடைவெளிவிட்டு ஒவ்வொரு நாற்றாக நட வேண்டும். 4–5 நாட்களில் உயிர்த் தண்ணீர் கட்டவேண்டும். பின்பு 7–10 நாட்களில் மீண்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தொடர்ந்து 15–20 நாட்களுக்கு ஒருமுறை தண்ணிர் கட்டவேண்டும். நாற்று நட்டு 3 வாரத்திற்கு பின்களை கொத்தவேண்டும். நட்டு 4-வது வாரத்திற்குப் பின் மேலுரமாக 70 கிலோ அமோனியம் சல்பேட் போடவேண்டும். தலைக் கதிர் ஆரம்பித்ததும் தண்ணீர் கட்டுவதை நிறுத்தவேண்டும். கதிர்கள் முதிர முதிர அறுவடை செய்யவேண்டும்.

மதுரை மாவட்டத்தில் மோரிஸ் வாழை சாகுபடி

திரு. எஸ். இ. கோதண்டராமன், வாழைப்பயிர், தனி விவசாய அலுவலர் அவர்களின் 26—8—66-ந் தேதிய உரையின் சுருக்கம்.

வாழை தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ், வடஆற்காடு மாவட்டத்தில் மோரீஸ் வாழையும், திருச்சியில் பூவன் மோரீஸ், ரஸ்தாளி ரகங்களும் கோவையில் பூவன், மொந்தன் தினுசுகளும், மதுரை மாவட்டத்தில் விருப் பாட்சி, மோரீஸ் மலை வாழை முதலியனவும் சிறந்த முறையில் சாகுபடி செய்ய ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் சிறுமலை கீழ்ப்பழனி மலைத் தொடரில் விளையும் விருப்பாட்சி பெரியகுளம் தாலுகா கம்பம் பள்ளத்தாக்கு, உத்தம பாளையம் முதலிய இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு வரும். மோரீஸ் பூவன் மொந்தன் தினுசுகளும் கொண்டுவரப்பட்டுள்ளது. பண்ணைத் திட்டங்கள் தயார் செய்து அதன்படி வாழை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறுகிய கால விவசாயக் கடனுதவிகளும் கிடைக்கச் செய்வதுடன் திருந்திய விவசாய முறைகளை வாழைச் சாகுபடியில் அனுசரிப்பது குறித்தும் ஆலோசனை கூறப்படுகிறது.

இந்த குறுகிய காலக் கடனுதவி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 ஆகும். ரூ. 250 ரொக்கமாகவும், மற்றதில் ரூ. 225-க்குப் பெருமான உர தினுசுக்காகவும், மீதி ரூ. 25 பூச்சி பூஞ்சான மருந்தாகவும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நபருக்கு ரூ. 2,000 வரை நபர் ஜாமீனில் அதிக பக்ஷமாக கொடுக்கப்படும்.

பாராட்டு

கிராம வளர்ச்சித்துறை வெளியீடான 'கிராம நலம், சுதந்திர தினச் சிறப்பு மலர் கிடைக்கப் பெற்றோம்.

கருத்தைக் கவரும் கட்டுரைகள், கதைகள், கவிதைகள், உள்ளத்திற்கு ஊக்கமூட்டும் உரைகள் இவைகளை கண்ணைக்கவரும் அட்டைப்படங்களுக்கிடையே பொறுக்கிப் பொதிந்து இந்தச் சிறப்பு மலரை ஒரு அழகிய பெட்டகமாய்ப் படைத்துத் தந்திருக்கின்றனர் கிராம வளர்ச்சித் துறையினர்.

இன்றைக்கு நாடு அனுபவித்துக்கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளின் ஆரம்பங்களும், காரணங்களும், அவைகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு மக்கள் பூணவேண்டிய திடமான உறுதிப்பாடுகளும், நேரிய வழிகளும் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள், இன்னும் மாநில மத்திய அமைச்சர்களின் உரைகளில் தெளிவாகக் கூறப்படுகின்றன. விவசாயம், பஞ்சாயத்துக்கள் வளர்ச்சி, இவைகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதைப் பல முனைகளில் விரித்துக் கூறுகிறது இந்தச் சிறப்பு மலர்.

நாட்டின் வளர்ச்சிப் பணியில் மக்களின் பல திறத்தோரும் ஏற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்புகளை உணரவேண்டியது மிகமிக அவசியம். ஆண்கள் பெண்டிர், முதியோர் இளையோர், முதலாளிகள் தொழிலாளர்கள், மாணவர் கற்றோர்,, தொழில்துறையாளர், விவசாய மக்கள், ஒவ்வொரு பகுதியினருக்கும் திட்டமான பொறுப்புகள் உண்டு. இவர்கள் யாவருக்கும் கருத்து விளக்கம் கூறும் சீரிய பணியைச் செவ்வனே முடிக்கிறது இச் சிறப்பு மலர்.

கருத்துக்களைக் கூறும் எழுத்தோவியங்கள் பால் நம் கண்களைக் கவர்ந்து நிறுத்தும் கலையோவியங்கள் இதழின் ஒவ்வொரு பக்கத்தையும் அழகு செய்கின்றன மலரை ஒழுங்குபடுத்தி அச்சிட்டிருக்கும் அமைப்புமுறை சிறப்பாக இருக்கிறது.

மொத்தத்தில் கிராம நலம் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதச் சிறப்பு மலர் அனைவரின் கண்ணுக்கும் கருத்துக்கும் ஒரு விருந்து

19-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 1,000 தார்கள் கிடைக்கும். ஒரு தார், சுமார் 30 கிலோ கிராம் எடை இருக்கும். ஒரு குலையில் சுமார் 100 முதல் 150 வாழைப்பழங்கள் கிடைக்கும்.

வாழைக்குவரும் நோய்கள்:

மோரீஸ் வாழையின் நோய்களில் முக்கியமானது "முடிக்கொத்து நோய்" (Bunchy top). இது ஒரு வைரஸினால் உண்டாகிறது. நோயினால் தாக்கப்பட்ட கன்றுகளைப் பிடுங்கி எரித்துவிடவேண்டும். குழிகளில் 3 அல்லது 4 அவுன்ஸ் மண்ணெண்ணை ஊற்ற வேண்டும். மற்ற மரங்களைக் காப்பாற்ற மெடாசிஸ்டாக்ஸ் (Meta systox) என்னும் மருந்தை தெளித்து நோய்களைப் பரப்பும் அசுவினி (Aphids) என்னும் பூச்சிகளைக் கொன்று இந்த நோய் பரவ வொட்டாமல் செய்யலாம்.

இலைப்புள்ளி நோய்:

இதை 1% போர்டோமிக்ஸ்ர் கலவையை 15 நாளைக்கு ஒரு தரம் இரண்டு அல்லது மூன்று தரம் தெளித்துப் போக்கலாம்.

மோரிஸ் வாழைக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. இவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். ஆகையால் இந்த வாழைக்கு இன்னும் அதிக கிராக்கி ஏற்படும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு முக்கியமாக கம்பம் பள்ளத்தாக்கு, உத்தபாளையம், சின்னமனூர் போன்ற ஊர்களிலும் அவைகளைச் சுற்றியுள்ள கிராமங்களிலுமுள்ள வாழை பயிரிடும் விவசாயிகள் அதிகமாக மோரிஸ் வாழையை உற்பத்தி செய்து நம் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதோடல்லாமல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய உதவி, லாபமடையலாம். முக்கியமாகத் தேவைப்படும் அந்நிய செலாவணியைப் பெற உதவுவார்களாக!

கரும்பு விளைச்சல் போட்டி 1965-66

மாவட்டப் பரிசுகள்

கரும்பாலைப் பகுதிகளில் கரும்பு விளைச்சல் போட்டியில் 1965—66ம் ஆண்டுக்கான மாவட்டப் பரிசுகள் விபரம் கீழே கொடுக்கப்படுகின்றன.

சர்க்கரை ஆலைப்பகுதியின் பெயர்.	மாவட்டப் பரிசு பெற்றோரின் பெயர், விலாசம்.	பயிர் செய்த கரும்பு	மகசூல் ஏக்கருக்கு டன்:	இலோ
	திருச்சி மாவட்டம்			
(1) லால்குடி	வி. ராஜேந்திரன், லால்குடி	கோ. 419 கட்டை	73	359
(2) பட்டவாய்த்தலை	ம. அண்ணுயலை, பட்டவாய்த்தலை	கோ. 419 நடவு.	91	773
(3) பாண்டியஜைபுரம்	ஜெ. ஜெயசிங் அம்மயநாயக்கனூர்	கோ. 419	118	602

மேலே குறிப்பிட்ட பரிசுகள் தேசிய சேமிப்புச் சான்றிதழ்களாக, மாற்றக்கூடிய பரிசுக் கூப்பன்களாகப் பொது நிகழ்ச்சிக் கூட்டத்தில் வழங்கப்படும் என அறிவிப்பவர்

கரும்பு பெருக்க அலுவலர்
திருச்சி.

1966-ம் ஆண்டு ஜூலை மாதத்திய காலநிலை அறிக்கை.

(சி. பாலசுப்ரமணியன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இம் மாதம் முதல் வாரத்தில் 1, 2, 3, 5 தேதிகளில் ஒரு சில இடங்களில் மழைப்பாரலும், 4-ந்தேதி கொஞ்சம் பரவலான பாரலும், 7-ந் தேதி இன்னம் கொஞ்சம் அதிகமான இடங்களில் பாரலும் இருந்தது. இரண்டாவது வாரத்தில் 8, 11, 13 தேதிகளில் சொற்ப இடங்களில் மாத்திரம் பாரலும், 9, 10 தேதிகளில் பரவலான பாரலும், மற்றய 12, 14 தேதிகளில் வரட்சியுமே நிலவியது. மூன்றும் வாரத்தில் 15, 16 தேதிகளில் பரவலான பாரலும், 18-ம் தேதி வரட்சி நிலையும் நீங்கலாக மற்ற 17, 19, 20, 21 தேதிகளில் அங்குமிங்கும் சிறு தூரல் இருந்தது. கடைசி வாரத்தில் 22-ம் தேதி பரவலான தூரலும், 23, 27 தேதிகளில் வரட்சியும் நிலவியது. மற்ற தினங்களில் ஆங்காங்கு சிறு தூரல் ஏற்பட்டது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத இரண்டாம் பகுதியில் சுமாரான மழை யிருந்தது. இது பூமியை உழுது வைப்பதற்குச் சாதகமாக இருந்தது. சொர்ணவாரி நெல், சீமையகத்தி, காய்கறிகள் முதலியன நலமூற்றன. செங்கற்பட்டுப் பகுதிகளில் வேர்க்கடலையில் சுருள்பூச்சியும், நெற்பயிரில் குருத்துப்பூச்சியும், கொள்ளைநோயும் சிறிது ஏற்பட்டு தகுந்த முறைகொண்டு நிவர்த்திக்கப்பட்டன. வட ஆற்காடு மாவட்டத்தில் பெய்த மழை போதிய அளவு இல்லாததால் கரும்பு வளர்ச்சி பாதிக்கப்பட்டது. கரும்பில் துளைப்பான்களும் காணப்பட்டன. இவை தகுந்த முறைகொண்டு தவிர்க்கப்பட்டன. ராணிப் பேட்டைப் பகுதிகளில் வேர்க்கடலை, சோளம், துவரை இவற்றின் விதைப்புக்கும், சம்பாநெல் விதைப்புக்குக் கழனியை தயார் செய்வதற்கும் இம் மழை உதவிற்று.

தென்னாற்காடு மாவட்டத்தில் போதிய மழையின் மையால் பூமியிலுள்ள குறுவைநெல், தோட்ட வேர்க் கடலை, கரும்பு முதலிய பயிர்கள் பாதிக்கப்பட்டன. ஆனல் மானவாரி வேர்க்கடலை, சிறு தான்யங்கள் இவற்றின் விதைப்புக்கு இது நன்மையளித்தது. வேர்க் கடலையில் சிறிதளவு சுருள்பூச்சிகள் கண்டு தகுந்த முறைகொண்டு தவிர்க்கப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை, நாகப்பகுதிகளில் சுமாரான மழையிருந்தது. ஆனல் பட்டுக்கோட்டைப் பகுதிகளில் மழை போதிய அளவு இல்லை. இதனல் தென்னையில் குரும்பை உதிர்தலும், பசுந்தாள் உரப்பயிர்களில் தழை உதிர் தலும் ஏற்பட்டது. வெண்டை, கத்தரி முதலிய காய்கறிப் பயிர்களில் சிறிதளவு துளைப்பான்கள் தோன்றின. ஆடுதுரை வட்டாரங்களில் பெய்த மழை குறுவை பயிருக்கு நன்மையளித்தது. இப்பயிரில் சிறிது பேன் தோன்றி தடுப்பு முறைகள் கையாளப்பட்டு நிவர்த்திக்கப்பட்டன.

திருச்சி மாவட்டத்திலும் கொஞ்சம் மழையிருந்தது. இது பொதுவாக எல்லாப் பயிர்களுக்கும் நன்மையளித் தது. சேலம் மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. இதனல் T.M.V. 2 வேர்க்கடலை, சோளம், ஆமணக்கு முதலியன விதைக்கப்பட்டன. கம்பு, நெல், வேர்க்கடலை முதலிய பயிர்களும் திருப்திகரமாக இருந்தன. கோவை மாவட்டத்தில் ஈரோடு, பொள்ளாச்சி முதலிய பகுதிகளில் மாத்திரம் கொஞ்சம் மழையிருந்தது. அதனல் பருத்தி, வேர்க்கடலை, சோளம் முதலியன நன்மையுற்றன. சுருள்பூச்சி, அசுகு முதலியன பொள்ளாச்சி பாகங்களில் வேர்க்கடலையில் சிறிது தோன்றின. இவை தகுந்த முறைகளால் தவிர்க்கப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் போதிய மழையின்மையால் போன மாதம் விதைப்புக்கு எடுத்துக்கொண்ட ஏற்பாடுகளைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறிது மழையிருந்தது. இது வேர்க்கடலை விதைப்புக்கும், முன்பு விதைக்கப்பட்ட வேர்க்கடலையில் களைஎடுப்புக்கும், நெல் விதைக்க பூமி தயார் செய்வதற்கும் சால உதவிற்று. நெல்லை மாவட்டத்தில் பெய்த மழை சராசரிக்கு மிகவும் குறைவாக இருந்தது. அதனல் MCU 2 பருத்தியில் பெருமளவு காய்த்துளைப்பான்களும், வெள்ளைச் சோளத்தில் துளைப்பான்கள், நவாப்பூச்சிகள், கிரிப்பூட்டைநோய் முதலியனவும், ரஷியா பருத்தியில் தத்துப்பூச்சிகளும் ஏற்பட்டன. அம்பாசமுத்திரம் பகுதிகளில் நெல் வளர்ச்சி மழையின்மையால் பாதிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சராசரிக்குக் குறைவாகவே மழையிருந்தது. அதனல் மா, கொய்யா, காய்கறிகள் முதலியவைக்கு அடிக்கடி நீர்ப்பாசனம் கொடுக்க வேண்டியிருந்தது. நாகர்கோயில் பகுதிகளில் நெல் நன்ருக இருந்தது. இப்பயிரில் தத்துப்பூச்சிகள் தோன்றின. தகுந்த தடுப்பு முறைகள் கையாளப்பட்டு இவை தவிர்க்கப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் மழை ஓரளவு இருந்தது. இது பூச்செடி, கொடிகளுக்கு நன்மையளித்தனவே தவிர ஏற்கனவே மழையின்மையால் பாதிக்கப்பட்டிருந்த உருளைக்கிழங்குப் பயிர்க்கு வெகுவாக நன்மையளிக்க வில்லை. பூச்சிகளோ வியாதிகளோ தென்படவில்லை.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்).

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
(1)	(2)	(3)	(4)
1	7-7-66	திருச்சிராப்பள்ளி	59·0
2	9-7-66	கொடைக்கானல்	56·0
3	15-7-66	சென்னை (மீனம்பாக்கம்)	63·0
4	22-7-66	சேலம்	59·4

பிராந்திய மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்).

வரிசை எண். (1)	பிராந்தியத்தின் பெயர். (2)	ஜூலை மாத மழையளவு. (3)	சராசரியில் இருந்து மாறுபாடு. (4)	குறிப்பு. (5)
1	வட பிராந்தியம்	81·7	—16·4	குறைவு.
2	கிழக்கரைப் பிராந்தியம் ..	48·4	—20·0	மிகக்குறைவு.
3	மத்தியப் பிராந்தியம் ..	83·0	—5·9	குறைவு.
4	தென் பிராந்தியம் ..	17·5	—33·6	மிகக்குறைவு.
5	மலைப் பிராந்தியம் ..	186.7	—13·6	குறைவு.

1966-ம் ஆண்டு ஜூலை மாத காலநிலை அறிக்கை
(மழையளவு மில்லி மீட்டர்களில்).

இடத்தின் பெயர். (1)	இம்மாத மழையளவு (2)	சராசரியில் இருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1ம் தேதி முதல் மொத்த மழையளவு. (4)
வட பிராந்தியம்—			
சென்னை (மீனம்பாக்கம்) ..	145·0	+53·6	338·0
திருர்க்குப்பம்*	115·0	+15·8	287·9
வேலூர்	32·0	—83·6	231·0
குடியாத்தம்*	38·1	—51·3	155·3
கிழக்கரைப் பிராந்தியம்—			
பாலூர்*	31·8	—52·9	366·5
திண்டிவனம்*	75·2	—23·8	199·7
கடலூர்	37·0	—29·0	179·0
நாகப்பட்டினம்	43·0	—0·2	136·0
ஆடுதுறை*	87·4	+26·4	204·5
பட்டுக்கோட்டை*	16·0	—40·6	225·0
மத்தியப் பிராந்தியம்—			
சேலம்	93·0	—3·3	330·0
சேலம்*	99 0	+3·3	399·9
கோயமுத்தூர்*	48·8	—39·6	192·4
கோயமுத்தூர்	39·0	—2·9	157·0
ஆலியார் நகர்*	124·4	—57·9	161·9
திருச்சிராப்பள்ளி	94·0	+65·3	284·0
தென் பிராந்தியம்—			
மதுரை	38·0	—11·5	207·0
பாம்பன்	..	—11·7	227·0
கோவில்பட்டி*	8·9	—33·0	188·1
பாளையங்கோட்டை ..	..	—8·4	129·0
அம்பாசமுத்திரம்* ..	2·0	—13·8	118·5
நாகர்கோயில்*	45·7	—103·4	142·2
கன்னியாகுமரி*	28·0	—53·5	127·2
மலைப்பிராந்தியம்—			
கொடைக்கானல்	195·0	+76·9	510·0
கூனூர்*	71·1	—24·4	610·9
உதகமண்டலம்*	207·5	+11·9	567·9
நஞ்சநாடு *	273·3	—118·6	570·5

குறிப்பு:—.* சென்னை விவசாய இலாக்காவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

[24-ம் பக்கத் தொடர்ச்சி]

விடை: புதிதாக ஆண்டு சந்தா செலுத்த விரும்பும் நீங்கள் ஆண்டு சந்தா தொகை ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) அருகில் உள்ள உங்கள் பஞ்சாயத்து யூனியன் விவசாய அலுவலகத்தில் செலுத்தலாம் அல்லது மணியார்டர் மூலம் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு செலுத்தி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம். சந்தா தொகை செலுத்தும் பொழுது தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.—

"விவசாய நெறியாளர்,
தபால் பெட்டி எண். 412,
சேப்பாக்கம், சென்னை–5"

திரு. G. நாகராஜன்,
சங்கொலிகுப்பம்,
கேப்பர்குவாரி அஞ்சல்,
கடலூர்.

வினா: 6. என் தோட்டத்தில் உள்ள சாத்துக்குடி மரங்கள் காய்க்கும் நிலையில் பூவும் பிஞ்சுமாக இருக்கின்றன. ஆனால் இந்நிலையில் கம்பளிப் பூச்சி போன்ற உருவமுள்ளதும் 1 மி.மீ. நீளமுள்ளது மான புழுக்களும் வேறுசில பூச்சிகளும் மரத்தில் உள்ள கொழுந்தையும், பூவையும் கொட்டிவிடச் செய்கின்றன. ஆகையால் எந்தவகை மருந்தினால் இந்த பூச்சிகளையும் புழுக்களையும் தடுக்க முடியும்.

மேலும் இச்சாத்துக்குடி மரங்கள் அதிக பயன் தருவதற்கு ஏற்ற வழியையும் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

விடை: நீங்கள் கொடுத்துள்ள விளக்கங்களைக்கொண்டு சாத்துக்குடியைத் தாக்கியுள்ள பூச்சி எது என அறிவது இயலாது. எனவே கடலூர் மாவட்ட விவசாய அதிகாரி அலுவலகத்திலுள்ள 'பயிர் பாதுகாப்பு உதவியாளரை' அணுகி பூச்சி தடுப்பு முறைகளை அறிந்துகொள்ளுங்கள். அதே அலுவல கத்திலுள்ள தோட்டக்கலை வளர்ச்சி உதவியாளரை அணுகி சாத்துக்குடி மரங்கள் அதிக பயன் தருவதற்கான வழிமுறைகளை அறிந்துகொள்ளவும்.

T. S. சந்திரசேகரன்,
மொரப்பாக்கம்.

வினா: 7. ஒரே சமயம் இரு வெவ்வேறு விதைகளை விதைக்கக்கூடிய கொர்ருகள் எங்கு கிடைக்கும்?

விடை: கொர்ரு தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவ தில்லை. ஆந்திர யாநிலத்தில் கடப்பா, சித்தூர், பெல்லாரி மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படு கின்றன. உங்களுடைய மாவட்ட விவசாய அதிகாரி மூலம் எழுதி பெற்றுக்கொள்ளவும்.

விவசாயச்செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.



1–9–66 அன்று சென்னையில் தோட்டக் கலை மன்றத்தில் காய்கறி உற்பத்தியில் பரிசு பெற்றோருக்குப் பரிசளிப்பு **விழா** நடந்தது. விழாவில் வைக்கப்பட்ட காய்கறிகளைப் பார்வையிடுபவர் அமைச்சர் திரு. கக்கன், விவசாய நெறியாளர் திரு K. V. ராமநாதன், கூட்டு நெறியாளர் பசுதுல்லாபின் ஆகியோர்.

சென்னை நகரில் 1966-ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரியில் நடந்த காய்கறித் தோட்டப் போட்டியில் பரிசு பெற்றோருக்குப் பரிசளிப்பு

சென்னையில் தோட்டக்கலை மன்றத் தோட்டத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி மாலை 5 மணிக்கு 1966-ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் சென்னையில் நடந்த காய்கறித் தோட்டப் போட்டியில் பரிசு பெற்றோருக்குப் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவுக்கு மாநில விவசாய அமைச்சர் திரு P. கக்கன் அவர்கள் தலைமை தாங்கினார். உயர் நீதிமன்ற நீதிபதி திரு சதாசிவம் அவர்கள் பரிசு வழங்கினார். மாநில விவசாயத்துறை நெறியாளர் திரு. K. V. ராமநாதன் அவர்கள் நன்றி நவின்றார்

பரிசு பெற்றோர் விபரம்

வகை. Category.	முதல் பரிசு பெற்றோர் பெயரும் விலாசமும்.		வகை, Category	முதல் பரிசு பெற்றோர் பெயரும் விலாசமும்,	
I	திருமதி P. L பத்மாவதி கங்காதர், 107, சீதம்மா எக்ஸ்டென்ஷன், சென்னை–18.	படம் 1	IV	ஔவை அகம், அடையாறு, சென்னை–20.	படம் 4
II	V. பலராமையா, மாநில தலைமை மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சென்னை–8.	படம் 2	V	குழந்தை நல அகம், (Child Welfare Home), சென்னை–13.	
III	ராணிமேரி கல்லூரி, சென்னை.	படம் 3	VI	இராமகிருஷ்ண மடம் R. K. மடம் ரோடு, சென்னை–4.	படம் 5

(படங்கள் பின் அட்டையில் பார்க்கலாம.)

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966



பரிசு பெறுவோர் :
திருமதி. பத்மாவதி கங்காதர்

1



2

திரு. வி. பலராமையா

ராணி மேரி கல்லூரி சார்பில் சென்னை

3



4

குழந்தை அகம் சார்பில் சென்னை

5

இராமகிருஷ்ண மடம்

(விளக்கத்திற்கு முன்பக்கம் பார்க்கவும்)